வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P .1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர்





Email : news@eelanadu.lk | மலர் : 06 | 23.03.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 84 | பக்கங்கள் : 16

# அவசியம் ஏற்பட்டபோது நாம் ஆயுதம் ஏந்தினோம்!

## ரில்வின் சில்வா வெளிப்படை கருத்து

கொழும்பு, மார்ச் 23

**ஐக்கிய தேசியக் கட்சி மாபெரும் படுகொலையைச் செய்துள்ளது. அறுபதாயிரம் பேரைக் கொன்று எங்கள் கட்சியைத் தடை செய்த அவர் களுக்கு எதிராக நாங்கள் போராடினோம் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**



ஆயுதங்களை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது நாங்கள் ஆயுதங்களை எடுத்தோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் -

ஜனநாயக அரசியலை மேற்கொண்ட எங்கள் கட்சி, 1983 கறுப்பு ஜூலை மற்றும் ஐ.தே.க. தொடங்கிய கறுப்பு ஜூலையை அடிப் படையாகக் கொண்டு, அநீதி யான மற்றும் சட்ட விரோத தடையை அடிப்படையாகக் கொண்டு கட்சியைத் தடை செய்தது.

மேலும் எங்களை அடக்கத் தொடங்கியது என்பதை நாங்கள் மிகத் தெளிவாகக் கூறி யுள்ளோம்.

15

## தேசபந்துவைப் பதவி நீக்க பாராளுமன்றில் பிரேரணை

கொழும்பு, மார்ச் 23



பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட தேச பந்து தென்னக்கோனை அந்தப் பத வியில் இருந்து நீக்குவதற்கான பிரே ரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவர அரசாங்கம் தயாராகி வருவதாக அரசாங்கத்தின் உள்ளக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

15

## வெளியில் இருந்து உணவு கேட்கும் தென்னக்கோன்!

கொழும்பு, மார்ச் 23

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பணி நீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், தும்பர சிறைச்சாலையிடம் ஒரு கோரிக்கையை விடுத்துள்ளார்.

தனக்கு வெளியே இருந்து உணவு பெறுவதற்கு அனுமதிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

15

## பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையின் அடுத்த கட்டம் சட்டமா அதிபர் கையில்!

### ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்

கொழும்பு, மார்ச் 23

பட்டலந்த ஆணைக் குழு அறிக்கையின் உள்ள டக்கங்களின்படி, குற்றச் சாட்டுகளைப் பதிவு செய் வதா அல்லது மேலதிக விசாரணைகளை மேற் கொள்வதா என்பதைத் தீர்மானிப்பது சட்டமா அதிபரின் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அறிவுசார் கலந்து ரையாடலில் பங்கேற்ற போது அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

1998 ஆம் ஆண்டு, அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க

15

## பெரும் ஆபத்தில் இலங்கை!

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் கொள்முதல் செயல் முறை தொடர்பான மிக முக்கியமான மற்றும் உணர்திறன் வாய்ந்த தரவுகள் வெளியாருக்கு தெரியவரும் அபாயம் உள்ளதாக நம்பகமான வட்டாரம் ஒன்று தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக் கிழமை வெளியான அந்த ஊடகத்தில் வெளியான செய்தியில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் மின்னணு முறை promise.lk வலைத்தளம் வழியாகும். அந்த வலைத்தளத்தில் உள்ள தரவுகள் சிறிது காலமாக சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்துக்குச் சொந்தமான தரவுத் தளத்தில் சேமிக்கப்பட்டுவந்தன. தரவு அமைப்பு சமீபத்தில் புதுப் பிக்கப்பட்ட பிறகு, சர்வதேச ஒப்பந்த (Inter national tender)

15

## மைத்திரிபாலவுக்கு எதிராக 400 வழக்கு!

கொழும்பு, மார்ச் 23

நான் மற்றவர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்ப தில்லை. ஆனால், பிறர் எனக்கு எதிராக சுமார் 400 வழக்குகளை தொடுத்துள்ளனர் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் மேலும் கூறியதாவது:-

நான் மற்றவர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்ப தில்லை. ஆனால், பிறர் எனக்கு எதிராக சுமார் 400 வழக்குகளை தொடுத்துள்ளனர். இதன்

15

## புலிகள் அமைப்பில் நாம் ஒதுக்கி வைக்கப்பட்டோம்!

### இப்போது சொல்கிறார் கருணா

மட்டக்களப்பு, மார்ச் 23

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து நாங்கள் பிரிந்தவர்கள் என்பதை விட நாங்கள் ஒதுக்கி வைக் கப்பட்டவர்கள் என்றுதான் கூறவேண்டும்.

அந்த நிலையில் நாங்கள் எமது கிழக்கு மாகாண இளைஞர்கள், மக்களின் உயிர்களைக் காக்க வேண்டும் என்பதற்காகவே பிரிந்து வரும் முடிவை எடுத்தோம் கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

15

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைப்பாடளிக்க புதிய செயலி

கொழும்பு, மார்ச் 23

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இது தொடர்பான முறைப்பாடுகளை அளிப்பதற்காக

புதிய தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.

இந்த அறிமுக நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்றது.

தற்போது முறையான மற்றும் புதிய தொழில்நுட்ப முறைகள் மூலம் தேர்தல் முறைப்பாடுகளை அளிக்க ECEDR மொபைல் செயலி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

15

## இறக்குமதியான வாகனங்கள் இப்போது துரிதமாக விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 23

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதம் தற்போது தீர்க்கப்பட் டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கோட தெரிவித்தார்.

அதன்படி, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சிக்கி யுள்ள வாகனங்களை விடுவிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வாகன இறக்குமதிக்கான தடை நீக்கப்பட்டு, பெப்ர வரி முதல் வாகன இறக்குமதிக்கு

15

## 28வீத பாடசாலை மாணவரிடம் ஸ்மார்ட் கைபேசிப் பாவனை!

கொழும்பு, மார்ச்

இலங்கையில் 28.4 வீத பாடசாலை மாணவர்கள் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளைப் பயன் படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் வெளியிடப்பட்ட உலகளாவிய பாட சாலை சார்ந்த மாணவர் சுகாதார கணக்கெடுப்பு அறிக்கையினூடாக குறித்த விடயம் தெரியவந் துள்ளது.

இதில் 31.3 வீதமானோர் சிறுவர்கள்

15

## சோடா என நினைத்து டீசலை அருந்திய குழந்தை உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,மார்ச்23

டீசலை அருந்திய ஆண் குழந்தை ஒன்று நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளது. ஊர்காவற்றுறை, நாரந் தனை தெற்கு பகுதியைச் சேர்ந்த சதீஸ் ரஞ்சித் என்ற ஒரு வயது 9 மாதங்கள் நிரம்பிய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், கடந்த 18ஆம் திகதி குழந்தையின் தந்தை லான்ட் மாஸ்டர் திருத்த வேலையில் ஈடுபட்டுள்ளார். பின்னர் டீசலை ஒரு போத்தலில் வைத்துவிட்டு

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் பச்சை குத்தினால் பாடசாலைக்கு செல்ல முடியாது

## யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழு பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச்.23

மாணவர்கள் பச்சை குத்தினால் பாடசாலைக்கு செல்ல முடியாது என்ற விழிப்புணர்வு செயல்பாட்டை மீண்டும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் முதலாம் காலாண்டு குழுக் கூட்டமானது பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, அரசாங்கத்தால் ஓர் தாயின் கருவில் குழந்தை கருவுற்றதிலிருந்து அக்குழந்தை முதியவராகும்வரை அவர்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்காக பிரதேச செயலகங்களில் முன்பள்ளி பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முதல் முதியோர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் வரையான பல்வேறு தரப்பட்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தம் பணியை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். எனினும், அவர்கள் மேலும் வினைத்திறனாக செயல்பட பிரதேச செயலாளர்கள் வழிப்படுத்த வேண்டும் என பதில் அரச அதிபர் கேட்டுக் கொண்டார்.

மேலும், மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் யூன் மாதம் 18 ஆம் திகதி பிறப்புப் பதிவு செய்யாத பிள்ளைகளுக்கான நடமாடும் சேவை நடைபெறவுள்ளதாவும் அதற்கு முன்பாக பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக பிறப்புப் பதிவு செய்யாத பிள்ளைகளுக்கான நடமாடும் சேவையை மே மாதம் 16ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு பதில் அரச அதிபரால் அறிவுறுத்தப்பட்டது.

பிரதி வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆண்டு 9 மற்றும் ஆண்டு 9 இற்கு கீழும் உள்ள பிள்ளைகளுக்கான அறநெறி வகுப்புகள், இணைப் பாட விதானச் செயல்பாடுகள் மற்றும் ஓய்வுகளைக் கருதி தனியார் கல்வி நிறுவனங்களின் கல்விச் செயல்பாடுகளை நிறுத்தி வைத்தல் என்ற தீர்மானத்துக்கு அமைய, பெற்றோர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களின் ஒத்துழைப்புடன் சீரான கட்டுப்பாட்டில் பேணுவதற்கு பிரதேச செயலக உத்தி யோகத்தர்களின் கண்காணிப்பு அவசியம் பிரதீபன் வலியுறுத்தினார்.

ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் பெண்கள் சிறுவர் பிரிவு இயங்காமல் உள்ளதாகவும், அதற்கான சேவைகள் முறைப்பாட்டுப் பிரிவுடன் இயங்குவதாகவும் கூட்டத்தில் பிரதேச செயலாளரால் சுட்டிக்காட்டப்பட்டதற்கு அமைய, உடனடியாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்ட பதில் அரச அதிபர், ஏப்ரல் மாதம் முதல் வாரத்திலிருந்து செயல்பட நடவடிக்கை எடுப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்ததாகவும் அதன் முன்னேற்றத்தை பிரதேச செயலாளர் அறிக்கையிடுமாறும் பதில் அரச அதிபர் கேட்டுக் கொண்டார்.

மாணவர்கள் பச்சை குத்தினால் பாடசாலைக்கு செல்ல முடியாது என்ற விழிப்புணர்வு செயல்பாட்டை மீண்டும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பதில் அரச அதிபர் தெரிவித்தார்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் நகர்ப்புற பாடசாலை மாணவர்கள், பரீட்சை நிறைவடைந்து வெளிவரும் போது அவர்களுக்கு இடையூறு செய்யும் வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள் துண்டுப் பிரசுரங்களை திணிப்பதாகவும், யாழ்ப்பாணம், நல்லூர், மல்லாகம் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேசத்தில் உள்ள சில தனியார் கல்வி நிறுவனங்களுக்கு முன்பாக பெற்றோர்கள் கூடுதலாக தரித்து நிற்பதால் பொது மக்கள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டதற்கு அமைய, போக்குவரத்து பொலிஸாரின் நடவடிக்கைக்காக ஆவன செய்வதாக பதில் அரச அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

தாய், தந்தையை இழந்து பிள்ளைகளை பராமரிப்போருக்கு மாதாந்தக் கொடுப்பனவு மாகாணத்தால் 3000 ரூபாய் வழங்கப்படுவதாகவும், தொண்டு நிறுவனங்கள் 5000 ரூபாய் வழங்குவதாகவும் தெரிவித்த மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர், பராமரிப்பாளர்கள் இக் கொடுப்பனவை பெறுவதற்கு நீதிமன்றக் கட்டளை பெறவேண்டும் எனவும் கூறினார். இதேவேளை, சிறுவர்கள் மற்றும் பெண்கள் அபிவிருத்திக்கு உறுதுணையாகவிருக்கும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமக்குரிய சேவையை வினைத்திறனாக வழங்குவதன் ஊடக தமது வாழ்க்கையிலும் சிறப்படைய முடியும் என பதில் அரச அதிபர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர், உதவி மாவட்ட செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)

# யாழில் ஐஸ் போதையுடன் கைதான யுவதி மறியலில்

யாழ்ப்பாணம், மார்ச்.23

யாழ்ப்பாணத்தில் இந்து மயானத்தில் வைத்து ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட யுவதி ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இருபாலை இந்து மயானத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் யுவதி ஒருவர் நின்று கொண்டிருப்பதாக கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குறித்த யுவதியை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர். விசாரணையின்போது யுவதியிடமிருந்து ஐஸ் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரான யுவதி திருகோணமலை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட யுவதி யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர், அவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (எ)

# மன்னாரில் கோர விபத்து ஒருவர் பலி; மூவர் காயம்

மன்னார், மார்ச்.23

மன்னார் பள்ளமடு - பெரியமடு பிரதான வீதியில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மேலும் மூவர் படுகாயமடைந்ததாக அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர்.

பெரிய மடு பிரதான வீதியூடாக பயணித்த டிப்பர் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியது.

இதன்போது, ஈச்சளவக்கை கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சாரதி உள்ளடங்களாக மூவர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த மூவரும் மன்னார் மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# போதையில் குடும்பத்தினருடன் தகராறில் ஈடுபட்ட இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மார்ச்.23

போதையில் தனது குடும்பத்தினருடன் தகராறில் ஈடுபட்ட இளைஞன் ஒருவர் ஊர்காவல்துறை பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத்தினரால் ஊர்காவல்துறை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், ஊர்காவல்துறை பகுதியைச் சேர்ந்த 18 வயது இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஊர்காவல்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கச்சதீவில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.23

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் கடமையாற்றிய நெடுந்தீவு பிரதேச செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபனால் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பதில் அரச அதிபர், கடல் வழி போக்குவரத்து ஊடாக மேற்கொள்ளப்பட்ட திருவிழா ஒழுங்கமைப்புக்கும் அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்து அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய நெடுந்தீவு பிரேதச செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களை ஊக்கப்படுத்துகின்ற செயல்பாடாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது. அந்தவகையில் நெடுந்தீவு பிரதேச செயலாளர், கணக்காளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கு நன்றிகள் - என்றார். இச் சந்தர்ப்பத்தில் கடற்படையினரின் ஒத்துழைப்பு சிறப்பாக அமைந்திருந்தனையும் குறிப்பிட்டதுடன், யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், நெடுந்தீவு பிரதேச சபையினர், வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், போக்குவரத்து மற்றும் சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், உதவி மாவட்டச் செயலாளர், அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர், நெடுந்தீவு பிரதேச செயலாளர், கணக்காளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (எ)

# கிராமிய வீதி அபிவிருத்தி குறித்து யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச்.23

கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய பிரதீபன், வீதிப் புனரமைப்பு பணிகளில் ஈடுபடும் திணைக்களத்துடன் இணைந்த வகையில் கமநல சேவைகள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் போன்ற ஏனைய தொடர்புடைய திணைக்களங்களின் ஆலோசனைகளையும் பெற்று ஒருங்கிணைந்தவகையில் திட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டும் என ஆலோசனை வழங்கினார். குறிப்பாக அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தை தான் நேரடியாக ஆய்வு செய்த போது பொதுமக்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர் எனவும், குறிப்பாக வெள்ளம் தேங்கிய இடத்தில் மதகு அமைத்திருந்தால் வெள்ளம் நிற்காது என கூறினர். இதன் மூலம் வீதிப் புனரமைப்புக்கு சிறந்த பொறிமுறையின் அவசியம் கட்டாயம் தேவை எனவும், எனவே, அனைவரினதும் ஆலோசனைகளை பெற்று கூட்டுப் பொறுப்புடன் வருங்காலங்களில் வீதிப் புனரமைப்பு வேலைகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தினார். மேலும், அர சாங்கமானது வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வட மாகாணத்தின் வீதிகளைப் புனரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், இதற்கமைய யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வீதிகளை புனரமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும், போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீதிப் புனரமைப்புத் திட்டத்தில் முன்னுரிமை அடிப் படையில் புனரமைக்க வேண்டிய வீதிகளை இனங்காண்பதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும் எனக் குறிப்பிட்டதுடன், பிரதேச செயலாளர்கள் புனரமைக்கப்பட வேண்டிய அனைத்துத் தர வீதிகளின் விவரங்களை வீதிகளுக்குரிய வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்த வகையில் சரியான முறையில் தயாரித்து வைக்குமாறும் பதில் அரச அதிபர் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்புச் செய்ய வேண்டிய வீதிகள் தொடர்பிலும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பிரச்னைகளை பட்ஜெட் தீர்க்கவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்



கொழும்பு, மார்ச். 23

**வரவு - செலவுத் திட்டம் நாட்டு மக்களின் பிரச்னைகளுக்கு சாதகமான தீர்வுகளை வழங்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஆரம்பம் முதல், நாட்டின் பிரதான பிரச்னைகள் மற்றும் சவால்களுக்கு நிலையான தீர்வை பெற்றுக் கொடுக்கும் நிலைப்பாட்டிலேயே ஐக்கிய மக்கள் சக்தி இருந்தது. ஆனால், இந்த வரவு - செலவுத் திட்டம் அத்தகைய தீர்வை வழங்கவில்லை எனவும் சஜித் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “பொல்துவ சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேலையற்ற பட்டதாரிகளின் நம்பிக்கைகள், அபிலாஷைகள் ஏமாற்றமடைந்துள்ளன. தற்போதைய அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரகாரம், இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 35000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. வழங்கிய ஏராளமான வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன. நாட்டு மக்கள் பெரும் ஏமாற்றத்தில் இருக்கும் நேரத்தில், இந்த நாட்டுக்கு ஒரு புதிய பயணமும், தொலைநோக்கு பார்வையும் அதன் பிரகாரமைந்த ஒரு வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட வேண்டும். இது மக்களைப் பாதுகாத்து, மக்களை வாழவைக்கும் வேலைத் திட்டமாக அமைந்திருக்க வேண்டும்”- என்றார்.(எ)

# ‘பசுபதிச்செல்வன்’ பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது



யாழ்ப்பாணம், மார்ச்.23

பருத்தித்துறை சிவன் கோயில் கும்பாபிஷேக பெருவிழாவில் காரை எம்.பி. அருளானந்தனுக்கு ‘பசுபதிச் செல்வன்’ பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

புலோலி பர்வதவத்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தில் (பருத்தித்துறை சிவன் கோவில்) அருள்மிகு சிறீ பர்வதவத்தனி அம்பாள் வாசல் நூதன திரிதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகப் பெருவிழா கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது, சைவசித்தாந்த பண்டிதர், மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனுக்கு ஆலய தர்மகர்த்தா, சிவாச்சாரியார்கள், சைவமெய்யன்பர்கள் சார்பில் ‘பசுபதிச்செல்வன்’ எனும் சிறப்பு ஆன்மீக விருது வழங்கப்பட்டது. (எ)

# மாத்தறை துப்பாக்கி சூட்டில் இருவர் பலி!

கொழும்பு, மார்ச் 23

மாத்தறை - தெவிநுவர பகுதியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக் கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை இலக்கு வைத்தே இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வான் ஒன்றில் வந்தவர்களால் இவ்வாறு துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்கள் தப்பிச் சென்று சிறிது தூரத்துக்குப் பின்னர் குறித்த வானை தீ மூட்டி விட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ள நிலையில், எரிந்த நிலையில், வான் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மாத்தறை - தெவிநுவர பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 29 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# நாடு முழுவதும் புதிய போக்குவரத்து வலையமைப்பை உருவாக்க முடிவு!

கொழும்பு, மார்ச் 23

நாடு முழுவதும் பத்து புதிய பல்வகை போக்குவரத்து நிலையங்களைக் கொண்ட போக்குவரத்து வலையமைப்பை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, மொறட்டுவை, ராகமை, கடவத்தை, கம்பஹா, மாலம்பே, அத்துருகிரிய, கட்டுநாயக்க மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளை மையமாகக் கொண்டு குறித்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

கண்டியிலும் காலி மாவட்டத்தின் தெவட்ட பகுதியிலும், மேலும் இரண்டு பல்வகை போக்குவரத்து நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அனுராதபுரம் போக்குவரத்து நிலையத்தில் சுமார் 40 வீத மேம்பாடுகள் தற்போது நிறைவடைந்துள்ளதாகவும், மற்ற பல்வகை போக்குவரத்து நிலையங்களின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறை முகங்கள் மற்றும் சிவில் விமானத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# ஆட்சிக்கு வந்த பின் அரசாங்கத்தின் தீர்மானங்கள் முற்றிலும் மாற்றம்!

கொழும்பு, மார்ச்.23

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் சூரிய சக்தி உற்பத்திக்கு தனி இடம் உண்டு எனவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமை எரிசக்தி உற்பத்தியின் காரணமாக நாமும் நாடென்ற வகையில் அதிக கவனம் செலுத்துவதாகவும், அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் 165 ஆவது பக்கத்தின் படி சூரிய சக்தியின் மூலம் 2000 மெகாவாட் மின்சாரத்தை படிப்படியாக தேசிய மின் கட்டமைப்புக்கு சேர்ப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டாலும், அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின் மேற்கொள்ளும் தீர்மானங்கள் அதற்கு முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து கேள்வி எழுப்பிய போதே சஜித் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நாட்டில் உள்ள நிலக்கரி, டீசல் அனல்மின் நிலையங்கள் மற்றும் அதற்குள் அரசுக்குச் சொந்தமற்றவை உள்ளடங்கலாக அவற்றின் உரிமையாளர்கள் பற்றியும் தற்போது டீசல், நிலக்கரி, நீர் மின்சாரம் மற்றும் சூரிய சக்தியைப் பயன்படுத்தி ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க அரசு செலவிடும் தொகையையும், தனியார் மின் உற்பத்தி நிலையம் மூலம் ஒரு யுனிட் மின்சாரம் கொள்வனவு செய்ய எவ்வளவு செலவாகும் என்பது உள்ளிட்ட விவரங்களை தெரிந்துகொள்ள விரும்புவதாகவும் சஜித் தெரிவித்தார்.

ஒவ்வொரு மின் நிலையங்கள் மூலமாகவும் வெவ்வேறு மின் உற்பத்தி மூலங்களுக்கூடாகவும் தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்கப்படும் மெகாவோட் அளவு, இலங்கை மின்சார சபையின் நீண்டகால மின் உற்பத்தித் திட்டத்தின்படி சூரிய சக்தி மூலம் எவ்வளவு உற்பத்தி செய்யப்படும் என கணிக்கப்பட்டிருப்பின் அதனை முன்வைக்குமாறும், இந்நாட்டில் நிறுவப்பட்டுள்ள ஒட்டுமொத்த சூரிய மின் சக்தி கொள்ளளவு கூரை மீதும் புவி மீதும் நிர்மாணிக்கப்பட்டுள்ள மின் கருத்திட்டங்களின் மூலம் வழங்கப்படுகின்ற பங்களிப்பு மற்றும் அதற்காக செலுத்தப்படும் விலைகளை முன்வைக்குமாறும் சஜித் கோரிக்கை விடுத்தார். (எ)

# ஓடையில் விழுந்து டிப்பர் விபத்து!


மாத்தளை, மார்ச்.23

மாத்தளை - கண்டி வீதியில் பலகடுவ, தேதுனு பாலத்தில் பயணித்த டிப்பர் ஒன்று ஓடையில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்து நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்த டிப்பர் சாரதி சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ)

# கருணா - பிள்ளையான் மீண்டும் இணைந்தனர்



மட்டக்களப்பு, மார்ச்.23

மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட ‘கிழக்கு தமிழர் கூட்டமைப்பு’ என்ற புதிய கூட்டமைப்பில் கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் மற்றும் பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் இணைந்து கொண்டதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நேற்று கைச்சாத்திட்டனர். இந்த நிகழ்வு மட்டக்களப்பு றிவோரா ஹோட்டலில் நடைபெற்றது.

பாராளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவை தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்குவதற்காக புதிய முயற்சியொன்றை பிள்ளையான் மேற்கொண்டு ‘கிழக்கு தமிழர் கூட்டமைப்பு’ எனும் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு அதில் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கடந்த 15 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இதனையடுத்து, எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் படகு சின்னத்தில் இணைந்து களமிறங்கியுள்ளனர்.

இந்த நிலையில், கிழக்கு தமிழர் கூட்டமைப்பு - கருணா தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்தானதையடுத்து, பிரிந்திருந்த கருணா - பிள்ளையான் ஆகியோர் மீண்டும் இணைந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் தேவைகளை கண்டறிந்தே நிதியொதுக்கீட்டை செய்ய வேண்டும்

## கஜேந்திரகுமார் எம். பி. வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 23

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதென்றால் ஆகக் குறைந்தது அங்கு தேவைகளைக் கண்டறியக் கூடிய முழுமையான ஆய்வுகளைச் செய்த பின்னரே நிதி ஒதுக்கீட்டை செய்யவேண்டும். அதை விடுத்து அரசாங்கமே முடிவுகளை எடுப்பதால் அங்கே உண்மையான அபிவிருத்தியை அடைய முடியாதென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள 500 மில்லியன் ரூபாய் விசேட நிதி ஒதுக்கீட்டை எவ்வாறு செலவு செய்ய வேண்டும் என்று கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேகர் யோசனை கோரியிருந்தார். ஆனால் இதுவல்ல முறை, போரால் பாதிக்கப்பட்டு 35 வருடங்கள் பின் தங்கியுள்ள பிரதேசத்தில், மக்களின் பொருளாதாரம் பலவீனமாக இருக்கும் இடத்தில் முழுமையான திட்டமிடல் ஒன்று இருக்க வேண்டியது அவசியமாகும்.

இதன்படி, ஆராய்ந்து நிதி ஒதுக்கப்பட வேண்டும். அதனை விடுத்து கூட்டமொன்றில் அதனை எப்படி செலவு செய்யப் போகின்றீர்கள் என்று கூறுவது முறையல்ல. அங்கு வரும் பதில் சரியானதாக இருக்காது என்று தெரிந்துகொண்டு அந்த நிதியை தாங்கள் விரும்பியபடி பயன்படுத்தக் கூடிய வகையில் மட்டுமே அந்தக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம். அந்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதென்றால் ஆகக் குறைந்தது தேவைகளைக் கண்டறியக்கூடிய முழுமையான ஆய்வுகளை செய்த பின்னரே நிதி ஒதுக்கீட்டை செய்ய வேண்டும். அதனை செய்யாமல் நாங்கள் முடிவுகளை எடுத்தால் அந்த மக்களின் உண்மையான அபிவிருத்தியை அடைய முடியாது.

கிடைக்கும் நிதியை எப்படி பயன்படுத்தப் போகின்றோம் என்று மக்களுக்கு படம் காட்டும் வகையில் கூறி மக்களை ஏதோவொரு வகையில் சமாளித்து மிகப்பெரிய நிதியை வேறு வேறு இடங்களுக்கு கொண்டு சென்று பயணிப்பதற்காக மட்டுமே நிதி ஒதுக்கீடு நடக்கின்றதே தவிர அந்த பிரதேசத்தை உண்மையிலேயே கட்டியெழுப்பி அந்த மக்களின் பொருளாதாரத்தை பாதுகாத்து பலப்படுத்தும் முயற்சியாக இருக்கப் போவதில்லை"- என்றார். (எ)

# ஐ.தே.க. ஆட்சியமைப்பதற்காக தீவிரமாக செயல்படுகின்றோம்

## நவீன் திஸநாயக்க சொல்கிறார்

கொழும்பு, மார்ச்.23

வலதுசாரி கட்சிகளை ஒன்றிணைத்து மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை அமைப்பதற்கான வேலைத் திட்டங்களை தீவிரமாக முன்னெடுத்துள்ளோம். சஜித் பிரேமதாஸ தனித்து செல்ல விரும்பினாலும், ஒற்றுமையுடன் பயணிக்க வேண்டும் என்பதே தமது விருப்பமாகும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் நவீன் திஸநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா - கொத்மலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"ஐக்கிய மக்கள் சக்தி வேறு, ஐக்கிய தேசிய கட்சி வேறல்ல. எனவே, இவ்விரு குழுக்களும் வெ வ்வேறாக செயல்படுவது கவலைக்குரியதாகும். எனவே, தாய் வீட்டுக்கு வந்து கடந்த காலங்களைப் போன்று ஒற்றுமையாக அரசியலில் ஈடுபடுவதற்கு சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

வலதுசாரி கட்சிகளை ஒன்றிணைத்து மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை அமைப்பதற்கான வேலைத்திட்டங்களை தீவிரமாக முன்னெடுத்துள்ளோம். எவ்வாறிருப்பினும், தனித்து இந்த பயணத்தை தொடர முடியும் என்று சஜித் பிரேமதாஸ எண்ணுகின்றார். ஆனால், நாம் இணைந்து பயணிப்பதற்கே விரும்புகின்றோம்.

அதேபோன்று, அவரது தரப்பிலும் பெரும்பாலானோர் இவ்விரு கட்சிகளும் இணைய வேண்டும் என்றே விரும்புகின்றனர். உள்ளகப் பிரச்னைகள் தொடர்பில் பேசி தீர்வு காண்பதற்கு முயற்சிக்க வேண்டும்" - என்றார். (எ)

# மே 8, 9 ஆம் திகதிகளில் மட்டும் பாராளுமன்ற அமர்வு நடக்கும்

கொழும்பு, மார்ச்.23

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவிருப்பதால் மே மாதத்தின் முதலாவது பாராளுமன்ற அமர்வுகளை மே 8 மற்றும் 9ஆம் திகதிகளில் மாத்திரம் நடத்துவதற்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

அதேநேரம், குறித்த தினங்களுக்கான பாராளுமன்ற அலுவல்கள் பற்றி ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள பாராளுமன்ற அமர்வு வாரத்தில் தீர்மானிப்பதற்கும் முடிவுசெய்யப்பட்டது.

மேலும், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய ஏப்ரல் மாதத்துக்கான பாராளுமன்ற அமர்வுகள் ஏப்ரல் 8, 9 மற்றும் 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (எ)

# முதல்வர் வேட்பாளராக ஹனிபா

கொழும்பு, மார்ச்.23

கொழும்பை மேலும் அபிவிருத்தி செய்ய ஐக்கிய மக்கள் சக்தி, வைத்தியர் ருவைஸ் ஹனிபாவை முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்துகிறது என்று

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று அறிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் அதிகார எல்லையில் வாழும் அனைவரினதும் எதிர்பார்ப்பு அபிவிருத்தியடைந்த நகரமொன்றை உருவாக்குவதேயாகும்.

இதன் நிமித்தம் ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் கொழும்பு முதல்வர் வேட்பாளராக வைத்திய கலாநிதி ருவைஸ் ஹனிபாவை முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்துகிறோம். தொழில் நிபுணத்துவம் வாய்ந்தவரும், திறமையானவரும், தைரியம் வாய்ந்தவரும் என சகல குணங்களும் நிறைந்த முற்போக்கு ஆளுமையாக ஹனிபா திகழ்ந்து வருகிறார் என சஜித் மேலும் தெரிவித்தார். (எ)

# உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

இரத்தினபுரி, மார்ச்.23

இரத்தினபுரி - சமனலவெவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பன்வில பாலத்துக்கு அருகில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் சமனலவெவ பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சமனலவெவ பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேதக நபர் இரத்தினபுரி பெலிஹூலோயா பகுதியில் வசிக்கும் 53 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சமனலவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

# விடுவித்த 323 கொள்கலன்களும் யாருக்குச் சொந்தமானவை

## முஜிபுர் எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு, மார்ச்.23

எதிர்க்கட்சிகளின் பட்டியலை வெளியிடும் அரசாங்கம் தனது ஆட்சியில் சுங்க அதிகாரிகளின் பரிசோதனைகள் எதுவுமின்றி வெளியில் அனுப்பிய 323 கொள்கலன்கள் யாருடையவை என்ற தகவலை இதுவரை வெளியிடவில்லை. அதனையும் வெளியிட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாக நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வரவு - செலவுத் திட்டத்தில் வருமானத்தை சேகரிக்கும் வேலைத்திட்டம் தொடர்பில் அரசாங்கத் தரப்பிலிருந்து பெரிதாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஜனாதிபதியும் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போது வருமானங்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்ற அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. அதேநேரம், அரசாங்கம் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் பல இருக்கின்றன.

குறிப்பாக வற்வரி நீக்குதல் உள்ளிட்ட பல்வேறுபட்ட வாக்குறுதிகள் இருக்கின்றன. அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் 103ஆம் பக்கத்தில் தேசிய உற்பத்திகளான முட்டை, பால், பாடசாலை உபகரணங்கள், உரம், சஞ்சிகை, பாடசாலை புத்தகங்கள், கணினி உபகரணங்கள் உள்ளிட்ட இன்னும் பல அத்தியாவசிய பொருட்களின் வற் வரியை நூற்றுக்கு பூச்சிய விகிதாரசத்துக்கு கொண்டுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதான் தேர்தல் காலத்தில் அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி. இந்த வாக்குறுதியின் அடிப்படையிலே இந்தத் துறையில் இருக்கும் அதிகமானவர்கள் தேர்தலில் அரசாங்கத்துக்கு வாக்களித்திருந்தனர். குறிப்பாக வற்வரியை பூச்சியத்துக்கு கொண்டுவருவதாகவும் அத்தியாவசிய பொருட்களின் வரியை நீக்குவதாகவும் தெரிவித்திருந்தார்கள். ஆனால், வற்வரி குறைக்கப்படவும் இல்லை. அதேநேரம் கணினி துறையில் இருப்பவர்கள் அவர்களின் உற்பத்திகள், தகவல்களை ஏற்றுமதி செய்யும்போது அதற்காக நூற்றுக்கு 15 சதவீத வரியை எதிர்வரும் முதலாம் திகதி முதல் விதித்திருக்கிறது. இவ்வாறு அரசாங்கத்தின் வாக்குறுதிகள் ஒவ்வொன்றாக மீறப்படுகின்றன.

அதேபோன்று, அரசாங்கம் அண்மைக்காலமாக எதிர்க்கட்சிகளின் ஒரு சில பட்டியல்களை வெளியிட்டு வந்தது. அதனை நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரம் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் சுங்கத்தில் இருந்த 323 கொள்கலன்கள் எந்தவித பரிசோதனையும் இல்லாமல் வெளியில் அனுப்பப்பட்டிருக்கின்றன.

அந்தக் கொள்கலன்கள் யாருடையவை? அதில் இருந்த பொருட்கள் என்ன? என்ற விடயங்களை அரசாங்கம் இதுவரை வெளியிடவில்லை. அதனால், அந்தப் பட்டியலையும் அரசாங்கம் வெளியிட வேண்டும்"- என்றார்.(எ)

# கணேமுல்ல சஞ்சீவ படுகொலை; மற்றுமொரு உதவியாளர் கைது

கொழும்பு, மார்ச்.23

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கணேமுல்ல சஞ்சீவ" என அழைக்கப்படும் சஞ்சீவ குமார சமரத்ன என்பவர் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு உதவி செய்ததாக கூறப்படும் மற்றுமொரு சந்தேக நபர் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர் கொழும்பு மாதம்பிட்டி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு 15 பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய இளைஞன் ஆவார்.

இதேவேளை, "கணேமுல்ல சஞ்சீவ" படுகொலை தொடர்பில் இதுவரை 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.03.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், பங்குனி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பேச்சில் அறிவும் நிதானமும் அவசியம்

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சாணக்கியன் இராச மாணிக்கம், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கடந்த காலத்தில் வங்கிக் கொள்ளைகளில் ஈடுபட்டதாகவும் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள், திருடர்கள் பற்றி பேச முடியுமா என்னும் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் பேசியிருக்கின்றார்.

சாணக்கியன் வயதிலும் அனுபவத்திலும் தமிழ் அரசியலில் மிகவும் சிறியவர். ஈழத் தமிழர் ஆயுதப் போராட்ட அரசியலின் சாட்சியாக இப்போதும் சிலர் இருக்கின்றனர். அவர்களிடம் கேட்டால் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் தமிழ் ஆயுத இயக்கங்கள் எவ்வாறு நிதியை திரட்டின என்பதை நினைவுபடுத்துவார்கள். வங்கிக் கொள்ளைகளில் ஈடுபடாத பிரதான இயக்கங்கள் எவையும் இல்லை. நீர்வேலி வங்கிக் கொள்ளை அன்றைய காலத்தில் புகழ்பெற்ற வங்கிக் கொள்ளைகளில் ஒன்று.

தமிழ் ஆயுத இயக்கங்களின் ஆரம்ப கால வங்கிக் கொள்ளைகளை சிறிலங்கா அரசு, திருட்டு என்றே அடையாளப்படுத்தியது ஆனால் தமிழ் அரசியலில் சூழலில் அவற்றை எவருமே திருட்டு என்றோ, பெடியாங்கள் திருட்டு நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள் என்றோ நோக்கியதில்லை - காரணம் அன்றைய சூழலில் ஆயுதப் போராட்டத்தின் ஓர் அங்கமாகவே அரசின் வளங்களை சூறையாடும் நடவடிக்கை நோக்கப்பட்டது. பிற்காலங்களில் அவ்வாறான நடவடிக்கைகளில் இயக்கங்கள் ஈடுபடவில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் இயக்கங்களுக்குத் தேவையான நிதியை இந்தியா வழங்கியது.

வரலாறு இவ்வாறிருக்கின்ற போது தென்னிலங்கையில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பியின் வங்கிக் கொள்ளையை திருட்டு என்று குறிப்பிடுவதானது, அரசியல் வரலாறு தொடர்பான அறிவற்ற செயலாகவே நோக்க வேண்டியிருக்கின்றது. புதிதாக அரசியல் காற்றை சுவாசிப்பவர்கள் அந்தக் காலகட்ட வரலாறு பற்றி அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். தங்களுக்குத் தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல்ரீதியில் ஜே.வி.பி. தொடர்பில் விமர்சிப்பதற்கு விடயங்கள் இருந்தால் அது தொடர்பில் குறிப்பிடலாம். இனப்பிரச்னை தொடர்பில் அவர்களது நிலைப்பாட்டிலுள்ள குறைபாடுகளை சுட்டிக் காட்டலாம், அவர்களது பொருளாதார திட்டங்களிலுள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டலாம் - அது அவசியமும் கூட, ஆனால் அவர்களது ஆயுதக் கிளர்ச்சியின்போது மேற்கொண்ட விடயங்கள் தொடர்பில் ஈழத் தமிழர் அரசியலை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் பேசுவது பொருத்தமானதல்ல - தவிர அது அரசியல் நாகரீகமும் அல்ல. இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர்கள் என்போர் கட்சியில் புதிதாக இணைந்து கொண்டவர்களுக்கு அரசியல் வகுப்புகளை எடுக்க வேண்டியது அவசியமானது.

ஏனெனில், ஜே.வி.பியின் கடந்தகால நடவடிக்கைகளை திருட்டு என்னும் ஒரு சொல்லால் அழைக்கும் போது, அது மறுபுறமாக அன்றைய காலத்தில் வங்கிக் கொள்ளைகளில் ஈடுபட்ட தமிழ் ஆயுத இயக்கங்களின் மீதும்தான் விரல்நீட்டும். இயக்க காலத்தின் நிதிசேகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பொது வெளிகளில் பேசினால் பெரும் சிக்கல்கள் ஏற்படும்.

# உள்ளூராட்சித் தேர்தலிலும் நாமே வெற்றி பெறுவோம்!

**ரில்வின் சில்வா சூளுரை**

கொழும்பு, மார்ச் 23

“போர் வெற்றி மற்றும் மின்சாரக் கதிரை என்பவற்றைக்கூறி வாக்குவேட்டை நடத்திய காலம் மலையேறிவிட்டது. உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும்.”

இவ்வாறு ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். கடந்த பொதுத்தேர்தலில் அனைத்து இடங்களிலும் வென்றோம். எனவே, உள்ளூராட்சிசபைத் தேர்தலிலும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

பொதுத்தேர்தலின்போது கிடைக்கப் பெற்ற மக்கள் ஆணை அதிகரிக்குமேதவிர குறைவதற்கு வாய்ப்பு இல்லை. பொதுத் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்காத நபர்கள்கூட இத்தேர்தலில் வாக்களிப்பார்கள்.

கடந்த காலங்களில் உள்ளூராட்சிசபைகள் கொள்ளையர்களின் கூடாரங்களாக இருந்தன. மோசடிகள் இடம்பெற்றன. மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்டவர்கள் ஒப்பந்தக்காரர்களாகவே செயல்பட்டனர்.

இந்நிலைமை எமது ஆட்சியின்கீழ் மாற்றியமைக்கப்படும்.

முன்பு ஜே.வி.பி. வசம் இருந்த திஸ்ஸ மஹாராம பிரதேச சபையைக்கூட சூழ்ச்சி செய்தே ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் கைப்பற்றினர். போர் வெற்றி, மின்சாரக் கதிரை இதற்காக பயன்படுத்தப்பட்டது. அந்த காலம் முடிந்துவிட்டது - என்றார். (அ)

# யாழ்ப்பாணம் உட்பட பல பகுதிகளுக்கு அனுப்பிய பொதிகளில் போதைப்பொருள்!

## மீட்கப்பட்டவற்றின் மதிப்பு ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாய்

கொழும்பு, மார்ச் 23

யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களுக்கு முகவரியிடப்பட்டு அனுப்பப்பட்ட சரக்கு பொதிகளில் இருந்து சுமார் ஒரு கோடியே 78 இலட்சம் ரூபாய் பெறுமதிமிக்க போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மத்திய தபால் சேவை பரிமாற்று நிலையத்தில் தேங்கிக் கிடந்த பொதிகளிலேயே இந்தப் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. மத்திய தபால் சேவை பரிமாற்று நிலையத்துக்குக் கிடைத்த சந்தேகத்துக்கிடமான 20 சரக்கு பொதிகளை சுங்க தபால் மதிப்பீட்டு பிரிவு அதிகாரிகள் திறந்து பார்த்து சோதனைக்கு உட்படுத்தியபோதே இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

கடந்த இரு வார காலப்பகுதியில் பிரான்ஸ், அமெரிக்கா, கனடா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து விமான தபால் சேவையின் மூலம் குறித்த சரக்கு பொதிகள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன என்று சுங்க பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், யாழ்ப்பாணம், கண்டி, நீர்கொழும்பு, ஜா-எல, வெள்ளவத்தை, நுகேகொடை, தங்கல்ல, மகியங்கனை மற்றும் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எனினும், இரு வாரங்கள் கடந்தும் சரக்குப் பொதியின் உரிமையாளர்கள் அவற்றை பெற வராதமையால் தபால்மா அதிபரின் உத்தரவின் பேரில் அதிகாரிகள் அவற்றை திறந்து பார்த்து சோதனைக்கு உட்படுத்தியிருந்தனர்.

இதன்போது, 14 சரக்கு பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 272 கிராம் குஷ் மற்றும் 2,049 போதை மாத்திரைகள் என்பன அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் சந்தைப்பெறுமதி சுமார் ஒரு கோடி 78 இலட்சம் ரூபாய் என சுங்கப் பிரிவினரால் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# அரச மாளிகையிலிருந்து மகிந்த விரைவில் வெளியேற நேரிடும்!

கொழும்பு, மார்ச் 23

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு விஜேராம மாவத்தையிலுள்ள அரச மாளிகையிலிருந்து வெகுவிரைவில் கட்டாயம் வெளியேற நேரிடும் என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனும் 20 நாட்கள்வரை தலைமறைவு வாழ்க்கை தந்தார். கடைசியில் நீதிமன்றத்தில் சரணடைய நேரிட்டது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்நாடுமீது, மக்கள்மீது அக்கறை இருந்தால் மக்கள் பணத்தை வீண்விரயம் செய்யாமல் வெளியேற வேண்டும்.

எது எப்படி இருந்தாலும் அரச மாளிகையில் இருந்து கட்டாயம் செல்ல நேரிடும் - என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தை வன்முறை!

வெ. இன்சுவை



பூவிற்கும் இரண்டு பெண்களுக்குள் ஏதோ தகராறு. இருவரும் மாறிமாறி திட்டிக் கொண்டார்கள். சண்டை என்னவோ இவர்கள் இருவரிடையேதான். ஆனால், தேவையே இல்லாமல் இருவரும் அடுத்தவரின் குடும்ப உறுப்பினர்களைப் பற்றி மிகவும் அசிங்கமாகப் பேசத் தொடங்கிவிட்டார்கள். அவர்களைக் கடந்து சென்றவர்கள் முகம் சுளித்துக் கொண்டே சென்றார்கள்.

ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பு. படித்த மேல்தட்டு மக்கள் வசிக்கும் குடியிருப்பு. எதற்காகவோ இரண்டு பெண்களுக்குள் பிரச்னை. அங்கும் வார்த்தைகள் வரம்பு மீற ஆரம்பித்து, தடித்த சொற்கள் விழ ஆரம்பித்தன. சிறிது நேரத்தில் அந்த வீட்டு ஆண்களும் சேர்ந்துகொள்ள காது கூசும் அளவுக்கு வசவுகள். இங்கே கொஞ்சம் ஆங்கிலம், மீதி தமிழ். மற்றபடி அந்த படிக்காத பெண்களுக்கும் இவர்களுக்கும் எந்த வேறுபாடும் இல்லை.

கோபம் வந்தால் எல்லா மனிதர்களும் தன்னிலை மறந்து போகிறார்கள். இதுவே வாய்மொழி வன்முறை என்பதாகும். வன்முறை என்றால் என்ன? மனிதர்களால் உடல் ரீதியான பலத்தையோ அல்லது சக்தியையோ பயன்படுத்தி பிற உயிரினங்களுக்கு தீங்கு விளைவிப்பதையும், அவமானம், வலி, காயம், இயலாமை, சொத்துகளுக்கு சேதம் மற்றும் மரணத்தை ஏற்படுத்துவது, ஒரு சமுதாயத்தின் வாழும் சூழலுக்கு அழிவை ஏற்படுத்துவது ஆகிய இவையே வன்முறை என வரையறுக்கப் படுகிறது. ஒருவரை அடித்து துவைப்பது மட்டுமே வன்முறை அல்ல. கத்தியால் குத்திக் கொல்வதோ, துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதோ, வெடிகுண்டு வீசிக் கூண்டோடு அழிப்பதோ மட்டும் வன்முறை என்று கட்டம் போட்டுவிடக் கூடாது.

வாய்மொழி வன்முறையும் பலருக்கு மிகப்பெரிய மனக் காயத்தை ஏற்படுத்தும். மற்றவர் முன்னிலையில் கேலி செய்வது, மட்டம் தட்டிப் பேசுவது, அவர் பேச விரும்பாத விஷயத்தைப் பேசுவது, குத்திக்காட்டிப் பேசுவது, அவமானப்படுத்தும் நோக்கில் பேசுவது, அபாண்டமான குற்றச்சாட்டைச் சுமத்துவது ஆகிய அனைத்தும் வன்முறையே.

ஒருவருடைய இனம், நிறம், வயது, தோற்றம், இயலாமை, மொழி, மதம், நம்பிக்கை, பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் இழிவாகப் பேசினால் அது குற்றம்.

வார்த்தை என்பது ஒலிகளின் ஓசை மட்டுமா? அது எழுத்துகளின் சேர்க்கை. வார்த்தைகள் என்பது சொற்களின் கோர்வை. ஆகவே, சொற்களை கோக்கும் போது நம் சொற்களில் கவனம் இருக்க வேண்டும். மனிதர்களின் நாக்கு கத்தியை விடக் கூர்மையானது. மோசமான நாக்கு ஒருவரின் நம்பிக்கையை சிதைக்கும், பெருமையைப் பொசுக்கும், உள்ளத்தில் ஆறாத ரணத்தை உண்டாக்கும், பழியைச் சுமத்தும் புகழைக் கெடுக்கும், ஊரையே அவருக்கு எதிராகத் திருப்பி, புழுதிவாரி தூற்ற வைக்கும்.

சிதறாத வார்த்தைகள் சீரான வாழ்க்கையைத் தரும். வாய்தவறி விழும் பேச்சுகள், கைதவறி விழும் கண்ணாடியைவிடக் கூர்மையானவை. ஒருவரிடம் நாம் பேசும்போது நாம் என்ன அர்த்தத்தில் பேசுகிறோம் என்பதைவிட, நாம் கூறுவதைக் கேட்பவர் எந்த அர்த்தத்தில் அதைப் புரிந்துகொள்வார் என்பதைக் கவனித்துப் பேச வேண்டும். ஒரே வார்த்தையில் அதிகபட்ச மகிழ்ச்சியையும், ஒரே வார்த்தையில் கடும் வேதனையையும் தரும் வல்லமை படைத்தது நம் நாக்கு.

நாம் நெருக்கமானவர்களிடம் நம்பி சொன்ன வார்த்தைகளை, மூன்றாம் மனிதர் வாயால் நாம் கேட்கும்போது அவமானப்படுகிறது நம் நம்பிக்கை. பல சமயம் யோசிக்காமல் கடும் சொற்களை வீசிவிட்டுப் பின்னர் வருந்துகிறோம். மௌனம் பல சண்டைகளைத் தடுக்கும். எந்தச் சூழ்நிலையிலும் நம் சிறந்த பதில் ஒரு புன்னகை. நம்மைத் தவறாக புரிந்து கொள்பவர்களிடம், புறக்கணிப்பவர்களிடம், புண்படுத்துபவர்களிடமும் அமைதியே நம் பதிலாக இருக்கட்டும். சுமுகமான சூழ்நிலை இல்லாத இடத்தில் நாம் மௌனத்தைக் கடைப்பிடிக்கும்போது சண்டையிடாமல், விவாதிக்காமல், உணர்ச்சிவசப்பட்டு கட்டுப்பாட்டை இழக்காமல் நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். மௌனத்தின்மூலம் நம் எதிர்ப்பைப் பலமாகக் காட்ட முடியும்.

மௌனமும், புன்னகையும்தான் இந்த உலகில் மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதங்கள். புன்னகை பிரச்னைகளைத் தீர்க்கும் மௌனமோ பிரச்னைகளே வரவிடாமல் தடுக்கும். நம் மௌனத்தைக் கண்டு பயப் படுவார்கள். நாம் ஆழமாகக் காயப்பட்டு இருக்கிறோம் என்பதையும் நம் மௌனம் உணர்த்தும். யோசிக்காமல் சட்டென ஒரு வார்த்தையைப் பேசிவிட்டதால் முறிந்து போன உறவுகளும், நட்பும் ஏராளமாக இருக்கக்கூடும். அந்த விநாடியில் அந்த வார்த்தை தவிர்க்கப்பட்டிருந்தால், பல இன்னல்கள் காணாமல் போயிருக்கும்.

இப்போது அதிக நா கட்டுப்பாடு அரசியல் புள்ளிகளுக்கும், தொண்டர்களுக்கும் அவசியம் வேண்டும். தேர்தல்

(14ம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 23.03.2025 - 30.03.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 09
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : நவமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் முனைப்புடன் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் முற்றிலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்கு பூர்ண வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்களின் மனதுக்குப் பிடித்த. அதன் காரணமாக அந்தஸ்து கௌரவம் உயரும். மாணவர்கள் அக்கறையுடன் நன்கு படித்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்படவும் வாய்ப்பு உண்டு.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எப்போதும் போல் மன மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத தனவரவு உண்டு. வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். சிலருக்கு தங்கள் மனதிற்குப் பிடித்த படி அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். சிலருக்குத் தொழில் திறன் அதிகரித்து முன்னேற்றம் ஏற்படும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர்கள். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். ஆயினும், உடன் பிறப்புகளுடன் ஒத்துச் செல்வது நல்லது. வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவால் முன்னேற்றங்கள் ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச் னைகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படும். எனவே துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள். மது, அஜீரண தொல்லைகள் எழலாம். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம். கவனம் தேவை.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வீட்டில் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சிலருக்கு சந்ததி விருத்தி ஏற்படும். தங்களுக்குப் பிடித்தமான, அழகான ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். பெரிய மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். பணியிடத்தில் உயர் அதிகாரிகளின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். சிரமமான காலமாக இருக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். ஆயி னும், ஓரளவு பணவரவு இருக்கும். சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் புது தெம்பும், உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். புத்தி தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


இந்த வாரம் மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சில ருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல்களும் வடக்கு மக்களும்





♦ வீரகத்தி தனபாலசிங்கம்

நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி தேர்தல்கள் மே மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்றன. கடந்த வருடத்தைய ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்காமல் விட்டவர்களையும் விட கூடுதல் எண்ணிக்கையானவர்கள் பாராளுமன்ற தேர்தலில் வாக்களிக்கவில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டு பாக்கும்போது உள்ளூராட்சி தேர்தல்களில் மேலும் கூடுதலான எண்ணிக்கையில் மக்கள் வாக்களிப்பில் அக்கறை காட்டாமல் இருக்கவும் கூடும் என்று தோன்றுகிறது.

பெரும் எதிர்பார்ப்புகளுடன் தாங்கள் அதிகாரத்துக்கு கொண்டுவந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுவது குறித்து மக்கள் அதிருப்தியடைந்திருக்கிறார்கள். குறிப்பாக, பொருளாதார இடர்பாடுகளில் தணிவை எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்திருக்கிறது. அரசாங்கத்தின் மக்கள் செல்வாக்கு குறையத் தொடங்கி விட்டதா இல்லையா என்பதை உள்ளூராட்சி தேர்தல்கள் நிச்சயமாக வெளிக்காட்டும்.

ஆனால், தங்களது எதிர்பார்ப்புகளை ஓரளவுக்கேனும் நிறைவேற்றுவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் இயலாமை காரணமாக விரக்தியடைந்திருக்கும் மக்கள் எதிர்க்கட்சிகள் பக்கமாக கணிசமானளவில் திரும்புவதற்கு எந்த காரணமும் இல்லை. சகல எதிர்க்கட்சிகளுமே மக்கள் மத்தியில் ஆதரவை இழந்து நிற்பதுடன் அமைப்பு ரீதியாக நிலைகுலைந்து போயிருக்கின்றன. அதனால் தென்னிலங்கையை பொறுத்தவரை பெரும்பாலும் பாராளுமன்ற தேர்தலில் வாக்களித்த பாணியிலேயே மக்கள் வாக்களிக்கக்கூடிய வாய்ப்பே காணப்படுகிறது.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியை ஆதரித்தார்கள். இரு மாகாணங்களிலும் பாரம்பரியமாக மக்களின் ஆதரவைக் கொண்டிருந்த தமிழ் தேசியவாத அரசியல் கட்சிகளைவிடவும் கூடுதல் ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியது. பாராளுமன்ற தேர்தலில் வாக்களித்த பாணியிலேயே உள்ளூராட்சி தேர்தல்களிலும் அவர்கள் வாக்களிப்பார்களா என்ற கேள்வி எழுகிறது.

வடக்கில் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருக்கும் கடற்தொழில், நீரியல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தேசிய மக்கள் சக்தி போட்டியிடும் சகல உள்ளூராட்சி சபைகளையும் கைப்பற்றும் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார். ஆனால், பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னரான ஐந்து மாதகாலப் பகுதியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கடைப்பிடித்த அணுகுமுறைகளும் அதன் செயற்பாடுகளும் அவர்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை அறிந்து கொள்வதற்கு உள்ளூராட்சி தேர்தல்கள் உதவும் என்று நம்பலாம்.

வடக்கு தமிழ்த் தேசியவாத கட்சிகள் பாராளுமன்ற தேர்தலின் முடிவுகளில் இருந்து ஒழுங்கான பாடத்தை படித்துக் கொண்டதாக தெரியவில்லை. பிரிந்து நின்று போட்டியிட்டதால் மாத்திரமே தங்களை வடக்கில் மக்கள் பெருமளவில் ஆதரிக்கவில்லை என்று தமிழ்த் தேசியவாத கட்சிகள் இன்னமும் நம்புகின்றன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அண்மையில் "தி இந்து" பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் மீரா சிறினிவாசனுக்கு வழங்கிய நேர்காணலில் தமிழ் மக்கள் தமிழ் தேசியவாத கட்சிகளுக்கு பாடத்தைப் புகட்டுவதற்கு விரும்பியதாக குறிப்பிட்டிருந்தார்.

'ஏங்களது கட்சி உட்பட பாரம்பரிய தமிழ் தேசியவாத கட்சிகளுக்கு தமிழ் மக்கள் பாடத்தைப் புகட்ட விரும்பினார்கள். எமது வாக்குகள் அரைவாசியாகக் குறைந்துவிட்டன. நேரப்போகின்ற ஆபத்தை உணர்ந்து விவேகமான முறையில் செயற்படத் தவறினால், அடுத்த தேர்தல் பெரிய அனர்த்தமாகவே இருக்கும். பாராளுமன்றத்தில் நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்" என்று அவர் கூறினார்.

> **இனவாதம் மீண்டும் தலைதூக்காமல் இருக்க வேண்டும் என்றால், அதே இனவாதம் இதுகாலவரையில் உருவாக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணவேண்டியது அவசியம் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்வதாக இல்லை.**

பாராளுமன்றத்தில் தமிழ்க்கட்சிகளின் ஒன்றிணைந்த செயற்பாட்டை வலியுறுத்தியிருக்கும் பொன்னம்பலம் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் கூட தமிழ்க் கட்சிகள் சிலவற்றுடன் ஐக்கியப்பட்டு செயல்படுவதற்கு முதல் தடவையாக முன்வந்திருக்கிறார். ஒரு கோட்பாட்டுப் பிடிவாதத்துடன் செயற்பட்டுவந்திருக்கும் அவர் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கூட்டணிகளை அமைப்பதற்கு இதுகாலவரையில் காட்டிவந்த தயக்கத்தை கைவிட்டிருக்கிறார்.

ஆனால், அவரின் தமிழ் தேசிய மக்கள்



முன்னணியுடன் சேர்ந்து உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுகின்ற சிறிய தமிழ்க்கட்சிகள் முதலில் வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த பின்னர் மாத்திரமே அவை இறுதியில் வேறு வழியின்றி அவரிடம் வந்து சேர்ந்திருக்கின்றன. அதனால் கொள்கை அடிப்படையில் ஒன்றிணைந்திருப்பதாக அவர்கள் செய்திருக்கும் அறிவிப்பு நம்பகத்தன்மை கொண்டதாக இல்லை.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி போன்ற வேறு அணிகளும் கூட்டணிகளை விஸ்தரித்து உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பெருமளவில் பயனளிக்கவில்லை. கூட்டணிகளில் சேருவதற்கு முன்வரும் தமிழ்க் கட்சிகள் சிலவற்றில் தலைவரையும் பொதுச் செயலாளரையும் தவிர்த்துப் பார்த்தால் ஒரு முச்சக்கர வண்டியில் அல்லது சிறிய வானில் ஏற்றிச் செல்லக்கூடிய எண்ணிக்கையிலேயே அவற்றின் உறுப்பினர்கள் இருக்கவும் கூடும். அதனால் அவற்றின் வாக்கு வங்கியின் இலட்சணத்தை புரிந்து கொள்வதில் எவருக்கும் சிரமம் இராது. அந்த கட்சிகள் இன்றைய அரசியல் அரங்கில் தங்களுக்கு ஒரு பொருத்தப்பாட்டை தேடிக்கொள்வதற்கு மல்லுக்கட்டுகின்றன.

இலங்கை தமிழரசு கட்சி சகல உள்ளூராட்சி சபைகளிலும் தனியாகவே போட்டியிடுகிறது. தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு உள்ளூராட்சி சபைகளில் நிருவாகத்தை அமைப்பதில் மற்றைய தமிழ் கட்சிகளுடன் இணைந்துகொள்வது என்ற நிலைப்பாட்டில் அந்த கட்சி இருக்கிறது. எந்தவொரு கட்சியும் உள்ளூராட்சி சபைகளில் தனியாக நிருவாகத்தை அமைப்பதற்கு போதுமான பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கு உள்ளூராட்சி தேர்தல் முறை அனுமதிக்காது என்று கூறி தமிழரசு கட்சி அதன் நிலைப்பாட்டை நியாயப்படுத்துகிறது.

தற்போது தமிழரசு கட்சி அதன் பதில் பொதுச் செயலாளரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதனால், வடக்கில் களத்தில் நிற்கும் கூட்டணிகளுக்கு தேசிய மக்கள் சக்தி காலூன்ற ஆனுமதிக்கக்கூடாது என்பதில் இருக்கின்ற அதே முனைப்பு தமிழரசு கட்சியை தோற்கடிக்க வேண்டும் என்பதிலும் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

அதேவேளை, தமிழரசு கட்சி அதற்குள் நிலவும் கடுமையான உட்பூசல்களையும் சமாளித்துக்கொண்டு தேர்தலை எதிர்நோக்க வேண்டியிருப்பது முக்கியமான ஒரு சவால். பாராளுமன்ற தேர்தலைப் போன்றே இந்த தேர்தலிலும் குழப்பத்தை உருவாக்கும் நோக்கில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள சில சக்திகளினதும் உள்நாட்டில் உள்ள தன்னல அக்கறைச் சக்திகளினதும் தூண்டுதலினால் பெருவாரியான சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன.

பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தின் பத்து தேர்தல் தொகுதிகளில் சாவகச்சேரியையும் ஊர்காவற்துறையையும் தவிர, மற்றைய எட்டு தொகுதிகளில் தேசிய மக்கள் சக்தியே முதலாவதாக வந்தது. பழைய தேர்தல் முறையின் பிரகாரம் நோக்கினால் இன்று யாழ்ப்பாணத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களில் எட்டுப் பேர் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். அந்த தேர்தலில் வாக்களித்த பாணியில் வடக்கில் மக்கள் உள்ளூராட்சி தேர்தலிலும் வாக்களித்தால் அதனால் ஏற்படக்கூடிய ஒரு அடிப்படைப் பிரச்சினை குறித்து சில அரசியல் அவதானிகள் செய்திருக்கும் எச்சரிக்கை முக்கிய கவனத்துக்குரியது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பரவலாக்கல் மூலமாக அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் தேசிய மக்கள் சக்திக்கு குறிப்பாக, அதன் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு (ஜே.வி.பி.) அக்கறை கிடையாது. புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் வரை மாகாணசபைகள் முறை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க உட்பட அரசாங்க தலைவர்கள் தொடர்ச்சியாக கூறிவருகிறார்கள்.

ஆனால், அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை பற்றி அவர்கள் எதுவும் பேசுவதில்லை.

இனவாதத்தையும் மதவாதத்தையும் மீண்டும் தலைதூக்க ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் சகல சமூகங்களையும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் சமத்துவமாக நடத்துவதே தங்கள் கொள்கை என்றும் இடையறாது கூறிவரும் அவர்கள் அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கல் கோட்பாட்டுக்கு எதிரானவர்கள் என்பது வரலாறு. இனவாதம் மீண்டும் தலைதூக்காமல் இருக்க வேண்டும் என்றால், அதே இனவாதம் இதுகாலவரையில் உருவாக்கிய பிரச்னைகளுக்கு தீர்வுகளைக் காண வேண்டியது அவசியம் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்வதாக இல்லை.

அதனால் அத்தகையவர்களின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வடக்கில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றினால் தேசிய இனப்பிரச்னைக்கு அதிகாரப்பரவலாக்கல் மூலமாக தீர்வொன்றைக் காண்பதற்கான தமிழ் மக்களின் நீண்டகாலப் போராட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த கோட்பாட்டுக்கு பெரிய பின்னடைவு ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவை அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரான தங்களது நிலைப்பாட்டுக்கு வலுச்சேர்ப்பதற்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் பயன்படுத்த முயற்சிக்கின்றார்களே தவிர, அந்த மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வைக் காண்பதிலோ அல்லது அதற்கான உகந்த சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கு தென்னிலங்கை மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதிலோ அக்கறை காட்டுவதற்கு அவர்கள் தயாராயில்லை.

இத்தகைய சூழ்நிலையில், வடக்கு தமிழ் மக்கள் தங்களது பல தசாப்தகால போராட்டத்தின் அரசியல் நியாயப்பாட்டை மலினப்படுத்தக்கூடிய முறையில் உள்ளூராட்சி தேர்தல்களில் நடந்து கொள்ளக்கூடாது. அந்த மக்களின் நம்பிக்கையை மீண்டும் வென்றெடுக்கக் கூடியதாக கற்பனாவாத சுலோகங்களில் தங்கியிருக்காமல் சமகால நிலைவரத்துக்கு இசைவான முறையில் தமிழ் தேசியவாத கட்சிகள் அவற்றின் பழைய போக்கை மாற்றிக்கொள்வதில் எந்தளவுக்கு அக்கறை காட்டும் என்பது இன்னொரு முக்கியமான கேள்வி. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மைய அரங்கிற்கு வந்திருக்கும் நிலைவரத்தை கையாளுதல்!



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) இரண்டாவது கிளர்ச்சியின்போது (1987 - 89) இடம்பெற்ற சம்பவங்களை விரிவாக ஆராய்ந்த பட்டலந்த அணைக்குழுவின் அறிக்கை மக்களின் கவனத்துக்குரியதாக மாறியிருக்கிறது. இது தொடர்பிலான சர்ச்சை நீண்டகாலமாக விவாதத்துக்குரியதாக இருந்து வந்திருப்பதுடன் நாட்டின் குழப்பகரமான கடந்த காலத்தையும் பிளவுகள் தொடர்ந்தும் வலுவானவையாக இருப்பதையும் நினைவுபடுத்துகிறது. ஜே.வி.பி.யின் கிளர்ச்சி வன்முறைகொண்டு ஒடுக்கப்பட்டபோது பட்டலந்தவில் இடம்பெற்ற நிகழ்வுகள் ஆறாத புண்ணாக தொடருகிறது. அந்த பிரச்சினை திடீரென்று வெளிக்கிளம்புவதன் மூலம் இது தெளிவாகிறது.

வன்முறையினதும் போரினதும் வடுக்கள் இன்னமும் ஆழமானவையாகவே இருக்கின்றன. பொருளாதார மீட்சி தொடக்கம் சமூக உறுதிப்பாடு வரை பெருவாரியான சவால்களுடன் நாடு மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் ஒரு நேரத்தில், நீண்டகால சமாதானம் மற்றும் சுபிட்சத்தை மனதிற்கொண்டு ஐக்கியத்தை கட்டியெழுப்பும் பரந்த குறிக்கோள் மீது கவனத்தை வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். ஆனால், கடந்தகால 'பேய்கள்' நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் ஓயாதுவந்து அச்சுறுத்தாமல் இருக்க அவற்றுக்கு ஒரு முடிவைக்காண வேண்டியது அவசியமாகும்.

பட்டலந்தயில் இடம்பெற்றவை பற்றிய பேரச்சம் தரும் விபரங்கள் தற்போது சமூக ஊடகங்களை நிரப்புகின்றன. அந்த நேரத்தில் தமிழர்கள் பிரத்தியேகமாக இலக்கு வைக்கப்படவில்லை என்றபோதிலும், அந்த விபரங்கள் தமிழ் ஊடகங்களையும் கூட நிறைத்து நிற்கின்றன. அப்போது அரசாங்கத்துக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்தம் ஒன்று நடைமுறையில் இருந்தது. அதற்கு முன்னர்தான் இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. விடுதலை புலிகள் இந்திய அமைதிகாக்கும் படையை எதிர்த்து சண்டையிட்டுக் கொண்டிருந்தது.

தற்போது சமூக ஊடகங்களில் உலாவரும் காணொளிகள் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் மாத்திரம் அல்ல என்பதை தமிழர்களுக்கு காண்பிக்கின்றன. அது அரசுக்கு எதிரான சிங்களவர்களின் கிளரச்சி என்பதால் அன்று சிங்களவர்கள் பெரும் ஆபத்தில் இருந்தார்கள். குறிப்பாக, சிங்கள இளைஞர்கள் மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டியிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அல் ஜசீரா தொலைக்காட்சியைச் சேர்ந்த ஒரு குழுவினால் தொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய தயார் நிலையில் இருக்கவில்லை என்று தெரிகிறது. அந்த கேள்விகளுக்கு அவர் வழங்கிய பதில்கள் அதை பார்த்துக்கொண்டிருந்தவர்களின் கருத்துக் கோணத்தைப் பொறுத்து வேறுபட்ட முறையில் நோக்கப்பட்டது. பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடும் வகையில் அவரின் பதில்கள் அமைந்திருந்தன. அவர் ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டு ஆணைக்குழு அறிக்கையை நிராகரித்தார்.


சுயபரிசோதனை செய்யப்பட வேண்டும் என்று கோரிய அந்த அறிக்கை 37 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி குறிப்பிட்டிருந்தது. ஆனால், கடந்த கால 'பேய்கள்' திரும்பி வந்திருக்கின்றன. இந்த பிரச்னை முன்னரங்கத்துக்கு வந்த பிறகு, பட்டலந்தயில் பலியானவர்களினதும் பாதிக்கப்பட்டவர்களினதும் உறவினர்களும் அவர்களுடன் பரிச்சயமாக இருந்தவர்களும் நீதியைக் கோருவதுடன் தாங்கள் கண்டவற்றைப் பற்றி சாட்சியம் கூற முன்வந்திருக்கிறார்கள். பல வருடங்களுக்கு அவர்களுக்கு இந்த பிரச்சினைக்கு ஒரு முடிவு தேவைப்படுகிறது.

அல் ஜசீரா தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்புக்கு மக்களிடமிருந்து வந்த பிரதிபலிப்பு கடந்த காலத்தில் இடம்பெற்ற அட்டூழியங்களை மறைத்துவிடமோ மறக்கடித்துவிடவோ முடியாது என்பதை வெளிக்காட்டுகிறது. பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை பாராளுமன்றத்தில் அரசாங்கம் சமர்ப்பித்ததை அடுத்து அது தொடர்பாக இரு நாள் விவாதமும் நடைபெறவிருக்கிறது. தொடர்ச்சியாக இரு நாட்கள் விவாதம் நடைபெறவிருந்த போதிலும் தற்போது இரு மாதங்களில் ஒவ்வொரு தினத்தில் விவாதத்தை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களினால் வெளிப்படுத்தப்படக்கூடிய கருத்துக்களை அக்கறையுடன் கவனிக்க வேண்டியதற்கு காரணங்கள் இருக்கின்றன.

ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது இடம்பெற்ற அட்டூழியங்களில் பல்வேறு தரப்புகள் சம்பந்தப்பட்டிருந்தன. பட்டலந்த மாத்திரம் தான் விசாரணைகளும் சித்திரவதைகளும் இடம்பெற்ற இடமல்ல. வேறு பல இடங்களிலும் அவை இடம்பெற்றன. அந்த நேரத்தில் இடம்பெற்ற சம்பவங்களில் சம்பந்தப்பட்ட முக்கியமான பிரமுகர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமல்ல.

1980 களில் அட்டூழியங்கள் ஒரு இடத்தில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருக்கவில்லை. அவற்றுக்கு ஒரு தனிநபரோ அல்லது குழுவோ மாத்திரம் பொறுப்பாக இருக்கவில்லை. ஜே.வி பி. பல அட்டூழியங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டது. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் முன்னாள் அரசாங்க உறுப்பினர்களும் இராணுவத்தினரும் மாத்திரமல்ல வேறு பல குழுக்களும் அவற்றில் ஈடுபட்டு அட்டூழியங்களைச் செய்தன.

ஜே.வி.பி.யினால் இலக்குவைக்கப்பட்ட இடதுசாரிக் கட்சிகளின் உறுப்பினர்களும் இதில் அடங்குவர். அவர்களும் தங்களது சொந்தத்தில் துணை இராணுவக் குழுக்களை அமைத்தனர். சில தலைவர்கள் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களில் அமைச்சர்களாக இருந்தது மாத்திரமல்ல, சர்வதேச மனித உரிமைகள் அரங்கங்களில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றும் இருந்தனர். பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மீதான பாராளுமன்ற விவாதத்தின் விளைவுகளில் இருந்து தற்போதைய அரசாங்கத்தின் உறுப்பினர்களினால் கூட தப்பிச் செல்லமுடியாமல் இருக்கும்.




அரசாங்கத்தினால் ஜெனீவாவில் விளக்கிக் கூறப்பட்டதைப் போன்ற (தண்டனை மற்றும் மன்னிப்பு வழங்குவதற்கான அதிகாரத்துடன் கூடிய) உண்மை மற்றும் நல்லிணக்கச் செயன்முறை வேதனைமிகு உண்மைகளைக் கண்டறியவும் தேசிய குணப்படுத்தலுக்கான பாதையில் செல்லவும் இலங்கைக்கு கால அவகாசத்தையும் இடைவெளியையும் கொடுக்கக்கூடும்.


பாராளுமன்ற விவாதம் பிரச்சினைக்கு தீர்வைக்காண்பதை நோக்கமாகக் கொண்டிராமல் மாறிமாறி குற்றப் பொறுப்புக்களைச் சுமத்தும் சமர்க்களமாக மாறுமேயானால், இலங்கயின் சமூக மற்றும் அரசியல் உறுதிப்பாட்டுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். பொருளாதார மீட்சி, ஆட்சிமுறைச் சீர்திருத்தங்கள் மற்றும் அபிவிருத்திக்கு உறுதிப்பாடும் ஒத்துழைப்பும் அவசியமானவையாகும்.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தற்போது ஏற்படுத்தியிருக்கும் குழப்பநிலையும் சமூகத்தில் துருவமயமாதலும் வெறுப்புணர்வும் அதிகரிக்கக்கூடிய சூழ்நிலையும் நாட்டின் நலன்களுக்கு உகந்ததல்ல. எதிர்ப்புணர்வுளை மேலும் ஆழமாக்கி பிறவுகளை மேலும் ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கக்கூடியதாக விவாதத்தை நடத்தாமல் உண்மை மற்றும் நல்லிக்கத்துக்கான பக்கச்சார்பற்ற அணுகுமுறையை கடைப்பிடிப்பதற்கு விவாதம் உதவினால் அது நாட்டுக்கு பயன் தரக்கூடியதாகும்.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் உரிமை மீறல்கள் தொடர்பாக சான்றுகள் சேகரிக்கும் அதன் பிரிவு இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தொடர்ந்தும் சான்றுகளைச் சேகரிக்கும் என்று அறிவித்தபோது இம்மாத ஆரம்பத்தில் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கம் அதை நிராகரித்தது. சான்றுகள் சேகரிக்கும் இந்த பிரிவுக்கு ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்ட சம்மவங்கள், அவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் உட்பட பரந்தளவிலான மனித உரிமை மீறல்கள் குறித்து தகவல்களை சேகரிப்பதற்கான ஒரு ஆணை இருக்கிறது.

ஆனால், அதன் விடுதலை புலிகளுடனான போரின் போது குறிப்பாக போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் மீதே அதன் முக்கிய கவனம் குவிந்திருக்கிறது. உள்நாட்டுச் செயன்முறை ஊடாக நல்லிணக்கம் உட்பட மனித உரிமைகள் தொடர்பிலான சவால்களை கையாளுவதற்கு உறுதிபூண்டிருப்பதாக அரசாங்கம் அதன் நிலைப்பாட்டை அறிவித்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58



வது கூட்டத்தொடரின் உயர்மட்ட அமர்வில் பெப்ரவரியில் உரையாற்றிய வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் பின்வருமாறு கூறினார்:

'சகல இலங்கையர்களினதும் நம்பிக்கையைப் பெறக்கூடிய செயன்முறை ஒன்றை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்கு முன்னதாக சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுடனும் சாத்தியமானளவு பரந்த கலந்தாலோசனை நடத்தி உண்மை மற்றும் நல்லிணக்க கட்டமைப்பு ஒன்றின் அமைப்பு தீர்மானிக்கப்படும். அரசியலமைப்பு வரையறைக்குள் உள்நாட்டுப் பொறிமுறைகளை நம்பகத்தன்மை கொண்டவையாகவும் முழுமையானவையாகவும் உறுதிசெய்வதே எமது நோக்கமாகும். இலங்கைச் சமுதாயத்திற்குள் பதற்றங்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்த இனவாதம் மற்றும் மதத் தீவிரவாதத்தின் விளைவான வன்முறைகளை விசாரணை செய்வதற்கான அதிகாரங்களைக் கொண்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நோக்கிய பணிகளை வலுப்படுத்துவதும் இதில் அடங்கும்."

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றின் கோட்பாட்டை முதலில் முன்வைத்தது 2015 ஆம் ஆண்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமே. 2019 ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பிறகு முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவும் அந்த கோட்பாட்டில் ஒரு தகுதி இருப்பதாக உணர்ந்தார். ஆனால், அது தொடர்பிலான செயன்முறைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கான பற்றுறுதி அவர்கள் இருவரிடமும் இருக்கவில்லை. வன்முறை அரசியல் கடந்த காலத்தைக் கொண்ட பல்வேறு அரசியல் சக்திகள் மத்தியில் இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு அரசியல், சமூக மற்றும் உளவியல் தந்திரோபாயங்கள் கலந்த ஒரு பன்முக அணுகுமுறை அவசியமாகும்.

ஆயுதமோதல், இனப்பதற்றம் மற்றும் அரசியல் துருவமயத்துடனான நாட்டின் சிக்கலான வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் மனக்குறைகளைத் தீர்த்துவைக்கவும் எதிர்காலத்துக்கான பொதுவான நோக்கு ஒன்றை உருவாக்கவும் எந்தவொரு செயன்முறையையும் மிகவும் கருத்தூன்றிய கவனத்துடன் வடிவமைக்க வேண்டும். அரசாங்கத்தினால் ஜெனீவாவில் விளக்கிக் கூறப்பட்டதைப் போன்ற (தண்டனை மற்றும் மன்னிப்பு வழங்குவதற்கான அதிகாரத்துடன் கூடிய) உண்மை மற்றும் நல்லிணக்கச் செயன்முறை வேதனைமிகு உண்மைகளைக் கண்டறியவும் தேசிய குணப்படுத்தலுக்கான பாதையில் செல்லவும் இலங்கைக்கு கால அவகாசத்தையும் இடைவெளியையும் கொடுக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டது தேர்தலுக்கு முன்னரான தோல்வி!

## இதுவே தொடர்கதையாகக் கூடாது!

பனங்காட்டான்

நடைபெறுமா நடைபெறாதா என்று மூக்கில் விரலை வைத்துப் பலரும் காத்திருந்த இலங்கையின் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் மே மாதம் 6ம் திகதி இடம்பெறுமென தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

2023ம் ஆண்டில் நடைபெறவிருந்து அதற்கான வேட்பாளர் மனுத்தாக்கலும் முடிவடைந்து, அரசாங்க அச்சகம் வாக்குச் சீட்டுகளை அச்சடித்த பின்னர் காணாமற்போன தேர்தல், இப்போது ஒன்றரை வருடங்கள் கழித்து, புதிய வேட்பாளர் பட்டியலோடு வந்துள்ளது.

தேர்தலை நடத்த கஜானாவில் (திறைசேரி) பணம் இல்லையென அன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை ஒத்தி வைத்ததுக்கு மாறாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் தூக்கி வீசிவிட்டு அத்தேர்தலை ரத்துச் செய்திருந்தார்.

நாடு முழுவதுமுள்ள 25 தேர்தல் மாவட்டங்களில் 340 உள்ளூராட்சிச் சபைகளுக்கு நடைபெறவிருந்த தேர்தல் 8,325 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கானது. இதற்கு நாற்பதுக்கும் அதிகமான அரசியல் கட்சிகளும், பல நூறு சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனு தாக்கல் செய்திருந்தன. 87,000 வேட்பாளர்கள் இத்தேர்தலில் பங்குபெறவிருந்தனர்.

எதிர்வரும் மே மாதம் 6ம் திகதி 336 சபைகளுக்கு இத்தேர்தல் நடைபெறவுள்ளது. சுமார் பதினேழு மில்லியன் பேர் இதில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் சுமார் 8,500. ஏறத்தாழ 80,000 வேட்பாளர்கள் இம்முறை போட்டியிடுகின்றனர். 107 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் (கூட்டணிகள் உட்பட) மற்றும் சுயேட்சைக் குழுக்கள் இத்தேர்தலைச் சந்திக்கின்றன. வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான வேட்பு மனுக்கள் ரத்துச் செய்யப்பட்டிருப்பது முக்கியமான விவகாரம்.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களுக்கேற்ப, வேட்புமனுக்களை நிரப்புவதில் காணப்படக்கூடிய தவறுகளை முற்கூட்டியே ஆணையாளர் வெளிப்படுத்தியிருந்தார். கடந்த மாத முற்பகுதியில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கூட்டத்தையடுத்து இதனை அவர் சுட்டிக்காட்டி அறிவித்திருந்தார். இதனை ஆங்கில அறிக்கையாக பின்வருமாறு ஊடகங்கள் வெளிப்படுத்தியிருந்தன:

'Mr. Ratnayake urged all parties to prioritise youth and women's participation in the local government election. He specifically emphasised that the absense of 25% youth representation in the nomination list could result in it's cancellation" (உள்ளூராட்சித் தேர்தலில் இளையோர் மற்றும் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். 25 வீதம் இளையோருக்கு இடமளிக்கத் தவறும் வேட்புமனுப் பட்டியல் ரத்துச் செய்யப்படும் முடிவுக்குச் செல்லும்).

பல சபைகளுக்கான தேர்தல் வேட்பு மனுக்கள் ரத்துச் செய்யப்பட்டமைக்கு இதுவே முக்கியமானதாக அமைந்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருமளவான வேட்புமனுக்கள் ரத்துச் செய்யப்பட நேர்ந்துள்ளது. இளையோருக்கு 25 வீதம் ஒதுக்கப்பட்ட வேளையிலும் அவர்களின் வயதை நிரூபிக்கும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் இணைக்கத் தவறியது, சிலவற்றில் அவற்றைச் சான்றுபடுத்துவோரின் ஒப்பம், காலம் போன்றவைகள் இல்லாமை இவைகள் ரத்துச் செய்யப்பட்டதற்கு காரணமாகியுள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட கட்சிகளிலும் சுயேட்சைக் குழுக்களிலும் இடம்பெற்றவர்கள் தங்களுக்கான தேர்தல் வாய்ப்பை இழந்துள்ளனர்.

இது தொடர்பாக நீதிமன்றத்துக்கு தாங்கள் செல்லவிருப்பதாக சிலர் ஏற்கனவே அறிவித்துள்ளனர். நீதிமன்றம் தற்செயலான தவறுகளுக்கு வாய்ப்பளிக்குமா அல்லது தேர்தல் சட்டத்தை ஒட்டியதாக தீர்ப்பை வழங்குமா என்பது எவராலும் முற்கூட்டித் தெரிவிக்க முடியாது.

> **தேர்தல் என்பது வெற்றி தோல்வி இரண்டும் கலந்தது. ஆனால், தேர்தலுக்கு முன்னரான வேட்புமனு தாக்கலின்போதே நிராகரிக்கப்பட்ட தோல்வி ஜீரணிக்க முடியாதது. ஏற்கனவே பல தேர்தல்களைச் சந்தித்த தமிழர்களின் கட்சிகள் மே மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் அந்த இடைவெளியை நிரப்பிக்கொள்ள வேண்டும்.**




தேர்தல் சட்டத்தில் புதிய விதிகள் இணைக்கப்பட்ட முதலாவது உள்ளூராட்சித் தேர்தல் இதுவென்பதால் வேட்புமனுக்கள் நிரப்பப்பட்ட பொழுது ஏற்பட்ட தவறுகளை கவனக்குறைவால் ஏற்பட்டவை என்று நியாயப்படுத்தி ஏதாவது வாய்ப்பைப் பெறுவதற்கு சகல அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு ஒரே குரலில் கேட்பின், தேர்தல் ஆணையகமும் அதனை நெறிப்படுத்தும் சட்டமுறைகளும் ஏதாவது செய்யலாமெனும் எதிர்பார்ப்பு பலரிடம் காணப்படுகிறது. ஆனால், இவர்கள் எப்போதாவது ஒன்று சேர்ந்து ஒரே குரலில் நிற்பார்களா என்பதுதான் இங்குள்ள முக்கியமான கேள்வி.

வெற்றி பெறக்கூடிய பல கட்சிகளும் சுயேட்சைகளும் கவனக்குறைவான தவறினால் அதற்கான வாய்ப்பை இழந்துள்ளன. இதுவே, குறிப்பிட்ட உள்ளூராட்சிச் சபைகளில் போட்டியிடும் மற்றைய கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் நல்வாய்ப்பாகப் பார்க்கப்படுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தளவில் தமிழரசுக் கட்சியும், அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தியும் பதினேழு உள்ளூராட்சிச் சபைகளிலும் போட்டியிடும் தகுதியைப் பெற்றுள்ளன. இதனால் இந்தச் சபைகளில் இரண்டு தரப்புகளும் நேரடியாக மோதிக்கொள்ளும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

அநுரவின் ஆட்சித்தரப்பு தமது முழுப் பலத்தையும் ஆயுதமாக்கி இத்தேர்தல் களத்தைச் சந்திக்க தயாராகியுள்ளது. தமிழ்த் தேசியத்தை அங்கீகரிக்க சகலரும் தங்களுக்கே வாக்களிக்க வேண்டுமென தமிழரசுக் கட்சி உரிமையோடு கோரியுள் ளது. இரு தரப்புமே பதினேழு உள்ளூராட்சிச் சபைகளின் நிர்வாகத்தை தமதாக் கிக் கொள்ள திடசங்கற்பம் பூண்டுள் ளன. இதுபோன்ற நெருக்கடியான சூழல் தமிழர் தாயகத்தில் மற்றைய சில உள்ளூராட்சிச் சபைகளிலும் உருவாகியுள்ளது. தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கின் சகல உள்ளூராட்சிச் சபைகளிலும் போட்டியிடுகிறது. தேர்தலுக்கு சுமார் நாற்பது நாட்கள் இருப்பதால் தேர்தல் பரப்புரை சூடு பிடித்ததாகவே காணப்படும்.

இதுவரை வெளியான செய்திகளின் அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் பரப்புரையை அதன் பதில் செயலாளரான சுமந்திரன் தமது பொறுப்பில் எடுத்துள்ளது தெரிகிறது. தமிழரசுக் கட்சிக்குள் ஏற்கனவே இருக்கும் உள்வீட்டுப் பிளவு இப்போதே நன்கு தெரியவந்துள்ளது. தமது கட்சிக்குள்ளேயே யாரை தோற்கடிக்க வேண்டும் என்ற குறிக்கோள் யாரை வெல்ல வைக்க வேண்டுமென்பதைவிட மேலோங்கி நிற்கிறது. சிறீதரன் தரப்பு, சிறீநேசன் தரப்பு, குகதாசன் தரப்பு என்பவை வேண்டப்படாதவைகளாக சிலரால் காணப்படினும், இனநலன் கருதி இவை அனைத்தும் ஒரு தலைமையின் கீழ் போட்டியை சந்திக்க வேண்டும். இதற்கான முழுப்பொறுப்பும் கட்சியின் தலைவராக இயங்கும் திரு.சீ.வி.கே. சிவஞானத்தைச் சார்ந்தது. இதனை அவர் காலத்தின் கடமையாகக் கருதி மேற்கொள்ள வேண்டியவராக உள்ளார்.

முன்னைய காலங்களில் உள்ளூராட்சித் தேர்தல் இப்போது போன்று அரசியல் கட்சிகளினதும் சுயேட்சைகளினதும் களமாக இருந்ததில்லை. தமிழர் தாயகத்தைப் பொறுத்தளவில் அந்தந்த சபைகளின் எல்லைகளுக்குள் வசிப்பவர்கள் போட்டியிடுவார்கள். அநேகமாக இவர்களில் பலரும் தமிழரசுக் கட்சி அல்லது தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களாகவே இருந்துள்ளனர். கிராம சபைகள், பட்டின சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் என்பவைகளுக்காக இத்தேர்தல் இடம்பெறும். ஆனால், இப்போது இவை மாற்றம் பெற்றுள்ளன. மாநகர சபைகளுக்கு அடுத்ததாக பிரதேச சபைகள் முக்கிய இடம் பெறுகின்றன.

இச்சபைகளின் எல்லைகளுக்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஆதரவாளர்களின் வெற்றிக்காக பரப்புரை செய்வது வழக்கம். ஆனால், கட்சித் தலைவர்கள் (ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்றோர்) உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுவதில்லை. ஆனால் இன்று உள்ளூராட்சிச் சபைத்தேர்தல்களில் அரசியல் கட்சிகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இதனால் கட்சியின் தலைமைப் பீடமே வேட்பாளர் தெரிவு, பரப்புரை என்பவைகளை தீர்மானிப்பவையாக மாறியுள்ளன. இளையோர் மற்றும் பெண்கள் பங்களிப்பு சட்டப்படி அதிகரிக்கப்பட்டதால் வேட்பாளர்களைத் தேடி அலையும் நிலைமை இம்முறை பல கட்சிகளுக்கும் ஏற்பட்டது.

எட்டு மாத இடைவெளியில் இலங்கையில் இடம்பெறும் மூன்றாவது தேர்தல் இது. கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 21ம் திகதி ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது. அநுர குமர திஸ்ஸ நாயக்க ஜனாதிபதியாகத் தெரிவானார். அடுத்த இரண்டு மாத இடைவெளியில் - நவம்பர் 14ம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. இதிலும் அநுர குமர அணியினரே மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றினர். மே மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபை தேர்தலிலும் தாங்களே அதிகூடிய சபைகளை கைப்பற்ற வேண்டுமென்ற இலக்குடன் இவர்கள் தேர்தலை சந்திக்கின்றனர். ஆதலால் அநுர குமர வடபகுதிக்கு தேர்தல் பரப்புரைக்கென விஜயம் செய்யும் சாத்தியம் கூடுதலாகவுள்ளது.

வடமாகாணத்தில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம், வன்னி தேர்தல் மாவட்டம் ஆகிய இரண்டையும் தங்கள் வசமாக்கும் திட்டத்துடன் அநுர குமர அணி களமிறங்கியுள்ளது. அதற்கும் அப்பால், வடக்கு கிழக்கின் அனைத்து உள்ளூராட்சிச் சபைகளிலும் வெற்றி பெற வேண்டுமென்ற முனைப்புடன் தமிழரசுக் கட்சி பரப்புரையை ஆரம்பித்துள்ளது. இவ்வருட கடைசியில் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படும் மாகாண சபை தேர்தலுக்கான முன்னோட்டமாக மேற்சொன்ன இரு தரப்பினரும் மே மாதம் 6ம் திகதிய தேர்தலை கணித்துள்ளனர்.

இத்தேர்தல் முடிவுகளை உள்ளடக்கியதாக அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டையும் அநுர குமர தரப்பு தங்களுக்கான வெற்றிக்களமாகப் பார்க்கிறது. இதனை முற்கூட்டியே அவர்கள் ஒரு சவாலாக தெரிவித்தும் வருகின்றனர். அதற்கு முன்னர் மகிந்த குடும்பத்தினரின் கொள்ளை, நிதி மோசடி மற்றும் ரணிலின் வதைமுகாம் தொடர்பான ஆணைக்குழு அறிக்கை போன்றவைகளை கையில் எடுத்து அவர்களது கட்சிகளை முடக்கும் நடவடிக்கையில் ஆட்சி பீடம் இறங்கியுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பிரமுகர்கள் சிலர் சஜித் அணியில் இருந்தாலும், அவர்கள் முற்காலங்களில் ரணிலுடன் சேர்ந்து இயங்கியதால் அவர்களில் சிலரும் கூட விசாரணை வலைக்குள் சிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க தரப்பு எதிர்பார்க்கும் அத்தனை நல்வாய்ப்புகளையும் நம்பிக்கையுடன் வெற்றி பெற முன்னோட்டமாக உள்ளூராட்சிச் சபைத்தேர்தல்களை அவர்கள் நம்புகின்றனர். அதற்கு சமாந்தரமாக தமிழர் தரப்பின் வெற்றியினூடாக தமிழர் தாயகத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டிய பொறுப்பு தமிழ் வாக்காளர்களைச் சார்ந்தது. வேட்பாளர் மனுத்தாக்கலில் சறுக்கியதுபோல் தேர்தலிலும் சறுக்கல் இடம்பெறக்கூடாது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும் அனர்த்தமாகிப்போன அல் ஜசீரா நேர்காணல்

எம்.எஸ். எம். அயூப்

டோஹாவில் இருந்து இயங்கும் அல் ஜசீரா தொலைக் காட்சியின் மெஹ்தி ஹசனின் 'ஹெட் ரு ஹெட்' நிகழ்ச்சியில் நேர்காணலின் தன்மை எத்தகையது என்பதை அறிந்திருந்தும் கூட, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதற்காக அதில் கலந்து கொள்வதற்கு இணங்கினார்? அவருக்கு அது பெரிய அனர்த்தமாகப் போய்விட்டது.

காலம் கடந்துவிட்டது என்ற போதிலும், இரு காரணங்களுக்காக இந்த கேள்வியை நாம் கிளப்புகிறோம். முதலாவதாக, நேர்காணல் செய்யப்படுபவர் யார் என்பதைப் பற்றி எந்தவிதமான அக்கறையும் இல்லாமல் தங்குதடையின்றி அட்டகாசமான முறையில் கேள்விகளால் துளைக்கும் பாணியிலான அந்த நிகழ்ச்சி விக்கிரமசிங்கவுக்கு ஆகாதது என்று தோன்றியது. இரண்டாவதாக, அவர் முறைப்பதற்கு பல விடயங்களைக் கொண்ட இலங்கை அரசியல்வாதிகளில் ஒருவர் என்பது நேர்காணலின் மூலம் தெளிவாகத் தெரிந்தது.

விக்கிரமசிங்கவுக்கு விரோதமானவர்களாக தோன்றிய சபையோர் முன்னிலையில் சில வாரங்களுக்கு முன்னர் லண்டனில் நடத்தப்பட்ட நேர்காணல் மாரச் 6 ஆம் திகதி ஒளிபரப்பாகியது. அதற்கு பிறகு சில சேதங்களை கட்டுப்படுத்துவதற்காக கொழும்பில் செய்தியாளர்கள் மகாநாடொன்றை கூட்டவேண்டிய அளவுக்கு முன்னாள் ஜனாதிபதிக்கு அது பெரும் பாதகமாக அமைந்துவிட்டது. தன்னுடனான நேர்காணலை முழுமையாக ஒளிபரப்பாமல், 'நல்ல பகுதிகளில் சிலவற்றை' நீக்கிவிட்டு வகுத்துத் தொகுத்து அல் ஜசீரா ஒளிபரப்பியிருக்கிறது என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.



ஹசனின் அட்டகாசமான நேர்கா ணல் பாணி மற்றும் பகைமை உணர் வைக் கொண்டதாகத் தோன்றிய சபையோரைக் கொண்ட சூழல் காரணமாக மாத்திரமல்ல, தொடுக்கப்பட்ட முக்கியமான கேள்விகளில் சிலவற்றுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதில் விக்கிரமசிங்கவுக்கு இருந்த இயலாமை காரணமாகவும் நேர்காணல் அவருக்கு ஒரு அனர்த்தமாகப் போய்விட்டது. மிரட்டப்பட முடியாதவராக தோன்றிய நேர்காணல் செய்தவரை ஆத்திரமூட்டியதன் மூலமாக நிலைவரத்தை விக்கிரமசிங்க மேலும் மோசமானதாக்கி விட்டார் என்று தோன்றியது.

ஊடகவியலாளர்களுடன் மோதுவது விக்கிரமசிங்கவுக்கு ஒன்றும் புதியதல்ல. முக்கியமான அல்லது சிக்கலான கேள்விகள் கேட்கப்படுகின்ற பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர் ஊடகவியலாளரை அவமதிக்க அல்லது அசௌகரியத்துக்கு உள்ளாக்க அவர் முயற்சிப்பார். 2023 அக்டோபர் 2 ஆம் திகதி ஜேர்மனியின் சர்வதேச தொலைக்காட்சி சேவையின் ( டி.டபிள்யூ) ஊடகவியலாளர் மார்ட்டின் காக்கிற்கு பேர்லினில் வைத்து வழங்கிய நேர்காணலில் விக்கிரமசிங்கவிடம் ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாக பிரிட்டனின் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட தகவல்கள் குறித்து தெரிவிக்கப்பட்ட யோசனைகள் பற்றி கேள்வி தொடுக்கப்பட்டபோது அவர் ஆத்திரடைந்து தனது நாட்டைப் பற்றி நினைவுபடுத்தினார். 'எதற்காக இலங்கையர்களிடமும் ஆசியர்களிடமும் இவ்வாறு கேட்கிறீர்கள்? நாங்கள் இரண்டாம் தரமானவர்கள் என்று நினைக்கிறீர்களா? இந்த வகையான மேற்கத்தைய மனோபாவத்தை விட்டுவிடுங்கள். நீங்கள் அபத்தமாக பேசுகிறீரகள்' என்று விக்கிரமசிங்க ஆவேசமாகக் கூறினார்.

வாக்குவாதத்திற்குள் 'மேற்குலகை' இழுப்பதற்கு அன்றைய ஜனாதிபதியை தூண்டியது எது என்பது தெளிவாகத் தெரியவில்லை. அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி. மேற்குலகுடனோ அல்லது ஆசியாவுடனோ எந்த தொடர்புமில்லாதது. அந்த பின்புலத்தில் ஜப்பானிய பத்திரிகையாளர் ஒருவர் கூட அதே கேள்வியை விக்கிரமசிங்கவை நோக்கி கேட்டிருப்பார். ஆனால், அந்த நேர்காணலில் இறுதிக்கட்டங்களில் அவர் கேள்விக்கு வலுவான தர்க்க ரீதியான பதிலை அவர் வழங்கினார்.

அதே போன்றே, இலங்கையில் ஒரு நேர்காணலின் போது ஒரு பெண் ஊடகவியலாளர் விக்கிரமசிங்கவிடம் 'நீங்கள் உள்நாட்டு கலாசாரத்தை பெருளவுக்கு விரும்புகிற ஒருவர் அல்ல என்ற குற்றச்சாட்டுகள் குறித்து என்ன கூறுகிறீர்கள்?' என்று கேட்டார். உடனே திருப்பி விக்கிரமசிங்க 'உங்களுக்கு மானவம்ம அரசனைத் தெரியுமா?' என்று பதில் கேள்வி தொடுத்தார். திகைத்துப்போன அந்த ஊடகவியலாளர் தனது கேள்விக்கும் மானவம்ம பற்றிய தனது அறிவுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று விக்கிரமசிங்கவிடம் கேட்கவில்லை.

நேர்காணல் செய்யப்படுபவர்கள் தங்களது பதில்களை நீடித்துக்கொண்டு போவதற்கு மெஹ்தி ஹசன் அனுமதிப்பதில்லை என்பதை எவரும் மறுதலிக்க மாட்டார்கள். அவரின் இந்த சுபாவம் சில சந்தர்ப்பங்களில் நேர்காணல் செய்யப்படுபவர்கள் முழுமையான பதிலை வழங்குவதை தடுக்கிறது. விக்கிரமசிங்கவுடனான நேர்காணலில் நாம் இதைக் காணக்கூடியதாக இருந்தது. அதே போன்றே நேர்காணல் செய்யப்படபவர்கள் தந்திரமானவர்களாக இருந்தால் கேள்விகளில் இருந்து கவனத்தை திருப்புவதற்கு அவர்கள் மேற்கொள்ளக்கூடிய முயற்சிகளையும் அது தடுக்கிறது.

இத்தகைய நேர்காணல்களின்போது ஓய்வுபெற்றவர்களாக இருந்தாலென்ன அல்லது பதவியில் இருப்பவர்களாக இருந்தாலென்ன அரச தலைவர்களுக்கும் கூட உயர்ந்த மதிப்புக்குரிய இடம் கொடுக்கப்படுவதில்லை. ஒரு சந்தர்ப்பத்திலேனும் ஹசன் முன்னாள் ஜனாதிபதியை விங்கிரமசிங்க என்று பெயர் சொல்லி அழைத்ததை தவிர வேறு விதமாக அழைக்கவில்லை. ஏளனத்துக்கு பதில் ஏளனமாகவே இருந்தது. 75 வயதான விக்கிரமசிங்க 'நீங்கள் பிறப்பதற்கு முன்னரே நான் அரசியலில் ஈடுபடத் தொடங்கிவிட்டேன்' என்று ஹசனைப் பார்த்துக் கூறியபோது சபையோரின் பலத்த சிரிப்புக்கு மத்தியில் அவர் 'அதுவே பிரச்னையின் ஒரு பகுதி என்று சிலர் சொல்லக்கூடும்" என்று பதிலளித்தார்.

பட்டலந்தவில் சித்திரவதை முகாம் இருந்ததையும் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டதைப் போன்று அந்த முகாமில் தனது ஈடுபாட்டையும் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒருவர் உண்மையில் எதிர்பார்க்க வேண்டுமா? அது பற்றி கேட்கப்பட்டபோது தொடக்கத்தில் இருந்தே அவர் நுணுக்கமாக ஆனால், சிறுபிள்ளைத்தனமாக அதை தவிர்ப்பதற்கு முயற்சித்தார்.

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையின் சிங்கள, ஆங்கில மென்பிரதிகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் ஆயிரக்கணக்கானவர்கள் மத்தியில் பகிரப்பட்டிருக்கும் நிலையில் 'அறிக்கை எங்கே?' என்று விக்கிரமசிங்க முதலில் கேட்டார். மெஹ்தி ஹசன் வசம் அறிக்கையின் பிரதி ஒன்று இல்லை என்ற நம்பிக்கையில் அந்த அறிக்கையில் இருந்து மேற்கோள் காட்டுமாறும் முன்னாள் ஜனிதிபதி அவரைக் கேட்டார். இலங்கையில் முன்னர் பி.பி.சி. யின் செய்தியாளராக பணியாற்றிய பிரான்சிஸ் ஹரிசன் அறிக்கையின் பிரதி ஒன்றைக் காட்டிய போது, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் மாத்திரமே அதன் உள்ளடக்கங்கள் செல்லுபடியாகக் கூடியது என்பது போன்று அது சபையில் சமர்ப்பிக்கக்கப்படவில்லை என்று விக்கிரமசிங்க கூறினார்.

அவர் பாராளுமன்றத்தில் 134 உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாக தெரிவானார். அவர்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் சிறிலங்கா பொது ஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தொடர்ந்தும் அவரை ஆதரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், நேர்காணலின்போது ராஜபக்சாக்கள் தன்னை ஆதரித்ததை மறுப்பதற்கு முயற்சித்ததை காணக்கூடியதாக இருந்தது. விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியில் இருந்தவரை அவரது சட்டமூலங்கள் மற்றும் பிரேரணைகள் சகலவற்றையும் பாராளுமன்றத்தில் ராஜபக்சாக்கள் ஆதரித்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். பட்டலந்த சித்திரவதை முகாமில் விக்கிரமசிங்கவின் ஈடுபாட்டையும் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் அவரை ராஜபக்சக்கள் ஆதரித்ததையும் நிரூபிப்பதற்கு ஹசன் தவறியிருக்கலாம். ஆனால், அந்த விவகாரங்கள் குறித்து விக்கிரமசிங்க கூறியதை எவரும் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள்.

பெரும்பாலும் இலங்கையின் சகல தலைவர்களுமே மறைப்பதற்கு பல விடயங்களைக் கொண்டிருப்பவர்கள் என்பதால் தங்களைப் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கையில் எந்தவொரு தலைவரும் அத்தகைய நேர்காணல் நிகழ்ச்சிகளில் பங்குபற்றக்கூடாது என்பதே அல் ஜசீராவுடனான விக்கிரமசிங்கவின் நேர்காணலில் இருந்து நாம் தெரிந்து கொள்ளக்கூடிய முக்கியமான விடயமாகும். லசந்த விக்கிரமசிங்க, கீத் நொயர் மற்றும் தாஜூதீன் ஆகியோருக்கு நடந்தது என்ன என்பதை பற்றி மகிந்த ராஜபக்சவினால் அத்தகைய சபையோரை நம்ப வைக்க முடியுமா? அல்லது பரணகம ஆணைக்குழு காணமல் போனோர் என்று பட்டியலிட்ட 19,000 பேருக்கும் நடந்தவை குறித்து நம்பவைக்க முடியுமா? அல்லது மனித உரிமைகள் விவகாரத்தை விசாரணை செய்வதற்கு பல ஆணைக்குழுக்களை நியமித்த காரணத்தையும் அவற்றின் அறிக்கைகளுக்கு என்ன நடந்தது என்பதையும் மகிந்தவினால் கூற முடியுமா? இந்த பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

மைத்திரிபால சிறிசேன அத்தகைய ஒரு நேர்காணலில் கலந்துகொள்வதாக இருந்தால் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னதாக பாதுகாப்புச் சபையின் கூட்டங்களில் இருந்து தனது பிரதமரை விலக்கிவைத்ததை எவ்வாறு அவரால் நியாயப்படுத்த முடியும்? குண்டுத்தாக் குதல்கள் குறித்து முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை என்று ஜனாதிபதி என்ற வகையிலும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும் எவ்வாறு அவரால் சபை யோரை நம்பவைக்கமுடியும்? இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மூலமாக ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் பேரவைக்கு உறுதி மொழிகளை வழங்கிய பிறகு பொறுப்புக் கூறலுக்கான பொறிமுறை ஒன்றை உரு வாக்குவதில் இருந்து பின்வாங்கியது ஏன் என்று அவரால் கூறமுடியுமா?

உள்நாட்டுப்போரின் இறுதி நாட்களில் இராணுவத்திடம் சரணடைந்த ஆயிரக்கணக்கானவர்கள் எங்கே என்று கோட்டாபய ராஜபக்சவிடம் ஒரு செய்தியாளர்கள் மகாநாட்டில் கேட்கப்பட்டது. அதற்கு இராணுவத் தளபதியிடம் கேளுங்கள் என்பதே அவரின் பதிலாக இருந்தது. 'ஹெட் ரு ஹெட்' நேர்காணல் ஒன்றில் அவரால் அவ்வாறு பதிலளிக்க முடியுமா? குறைந்தளவுக்கு கேள்விகளால் துளைக்கப்படக்கூடிய தலைவர் அநுரா குமார திசாநாயக்காவாகவே இருக்கக்கூடும்.

இத்தகைய விவகாரங்கள் குறித்து உள்நாட்டு ஊடகவியலாளர்களினால் கேட்கப்படும்போது இந்த தலைவர்கள் வெற்று வீம்புபேசி சமாளித்து ஏமாற்றலாம். பாதுகாப்பு உட்பட பல மட்டுப்பாடுகள் உள்நாட்டு ஊடகவியலாளர்களுக்கு இருக்கிறது. ஆனால், நாட்டின் எல்லைகளுக்கு வெளியே வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் அவ்வாறு நடந்துகொள்ள முடியாது.

(டெய்லி மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் ஆட்சி தேர்தலில் வாக்காளிக்கப்போவோர் யார்?

ச. வி. கிருபாகரன், பிரான்ஸ்

தமிழ் மக்களின் சரித்திரத்தில், அரசியல் கட்சிகளிற்குள்ளன ஒட்டுமொத்தமான ஒற்றுமை என்பது மூன்று தடவையே காணப்பட்டது, ஆனால் நீடிக்கவில்லை. ஒன்று 1972ம் ஆண்டு முதல் 2004வரை, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் உருவாக்கமும் முடிவும். அடுத்து 2001ம் ஆண்டு முதல் 2010வரை தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆரம்பமும் முடிவும். அடுத்து தமிழ் சிவில் சமூகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ் ஜனதிபதி வேட்பளருக்கான ஒருங்கிணைப்பு. இவை யாவற்றுக்கும் - திரு ஆனந்தசாங்கரி, பரம்பரை அரசியலை நகர்த்தும் கஜன் பொன்னம்பலம் ஆகி யோரே காரணம் என்பதை தமிழர் வரலாறு எழுதும்.

கடந்த வருடம் உருவான சிவில் சமூகத்தின் ஒருங்கிணைப்பு என்பது, இதை உருவாக்க எடுத்த காலம்கூட இது நிலைக்கவில்லை. இதற்கு முழு காரணமும், சிவில் சமூகத்திடையேயும் அரசியல்வாதிகள் எனும் தேர்தல்வாதிகள் நூறுவீதம் காரணமாக அமைந்துள்ளது.

மூன்றவது சிவில் சமூகத்தின் ஒருங்கிணைப்பை கண்டு சர்வதேமே திகைப்பிற்குள்ளனது என்பது வேறு கதை. இவ்வுருவாகத்தை பார்த்த பௌத்த சிங்களவர்கள் பீதி கொண்டது மட்டுமல்லாது சர்வதேசமும் எம்மை ஏற்று கொள்ளும் நிலைமைக்கு ஆவலுடன் பார்த்து கொண்டிருந்தது என்பதே உண்மை. இதற்கு இந்தியாவின் மறைமுக ஆதரவும் இருந்துள்ளது. இவ் உருவாக்கத்தை, நாம் ஐ.நா.மனித உரிமை சபையின் உரையிலேயே கூறியிருந்தோம். இவ் ஒற்றுமையை, தமது சுயநலங்களின் அடிப்படையில் குழப்பிய பெருமைக்கு உரியவர்கள், இன்றும் நல்ல மனிதர்களாக வலம் வருவது திகைப்பிற்கு உரியது.

சரித்திரங்களை அவதானமாக ஆராயும் வேளையில், பாரளுமன்ற அரசியலிற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த வடக்கு கிழக்கு அரசியல், காலப் போக்கில் இன்று உள்ளூர் ஆட்சி சபைகளுக்கு, அதாவது பிரதேச சபையில் முக்கியம் பெற்றுள்ளது. புதிய அரசாங்கத்தின் புதிய யாப்புடன் தமிழ் மக்களின் அரசியல் வரலாறு என்பது, முன்னைய ஜனதிபதி கூறிய 'பஞ்சாயத்தில்' முடியவுள்ளதோ தெரியவில்லை!

முன்னைய காலகட்டங்களில் - உள்ளூர் ஆட்சி தேர்தல்களில் அரசியல் கட்சிகளின் அடிப்படையில் போட்டியாளர்கள் நிறுத்தப்பட்டது கிடையாது. இதற்கான முக்கிய காரணம், இங்கு தேர்தல்கள் தொகுதி அல்லாது சில நூறு வாக்காளர்களை கொண்ட 'வட்டாரங்களே' காணப்படுகின்றன. இவ்வட்டாரங்களில், தேர்தல்களில் போட்டியிடுபவர்கள், தமது வட்டாரத்தில் உள்ள உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களின் வாக்குகளை நம்பியே போட்டியிட முன்வருவதுடன், போட்டியாளர் வட்டாரத்தில் பிரபல்யமானவரானால் வெற்றியும் அடைவார். கட்சியின் செல்வாக்கை கணிக்க முடியாது.

சுருக்கமாக கூறுவதனால், அன்றும் இன்றும் உள்ளூர் ஆட்சி மன்ற தேர்தலின் முடிவுகளை அடிப்படையாக வைத்து, எந்த கட்சியின் அரசியல் செல்வாக்கையும் கணிக்க முடியாது. சுருக்கமாக கூறுவதனால், எனது வாழ் நாளில், எனது நாட்டில் வாழ்ந்ததற்கு மேலாக வெளிநாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் என்னால், எனது பிறந்து வளர்ந்த ஊருக்கு செல்ல முடியுமானால், அங்கு உள்ளூர் ஆட்சி தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்பட்டால், என்னால் கூட்டமைப்பு, கூட்டணி கொண்ட எந்த வேட்பாளரையும நிட்சயம் தோற்கடிக்க முடியும். அங்கு யாரும் அரசியல் கட்சிக்கோ, கொள்கைகோ அல்லது ஒரு நாடு இரு தேசம், ஒற்றையாட்சிக்கு வெளியில் என்றவற்றுக்கு மேலாக, எனது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் போன்றோர் அரசியலை ஒதுக்கிவிட்டு, எனது முகத்திற்கும் எனது அன்பு நட்பிற்கே வாக்களிப்பார்கள்.

இவற்றை புரியாத தேர்தல்வாதிகள், தமது சுயநலத்தின் அடிப்படையில், கூட்டமைப்பும் கூட்டணியும் ஐக்கியமும் பேசுகிறார்கள். இவர்களது இவ் தத்துவங்கள் எண்ணங்கள் சந்தர்ப்பவாத சிந்தனைகள் பாரளுமன்ற தேர்தல் காலத்தில் எங்கு சென்றுள்ளது? பாரளுமன்ற தேர்தல் வேளையில், தமது வேட்பாளர்களிற்கு - பத்திலிருந்து பன்னிரண்டு தொகுதிகளில் வெற்றி பெறுவார்களென பகற்கனவு கண்டவர்கள், இப்பொழுது ஐக்கியம் பேசுகிறார்கள். உண்மையில் விசுவசமாக ஈழத்தமிழர்களின் எதிர்காலம் பற்றி அக்கறை கொண்ட, முதிர்ச்சி அனுபவம் பெற்ற அரசியல்வாதிகள், விசேடமாக, 2009ம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்காலின் அனர்தங்களின் பின்னர், தமிழ் மக்கள், அரசியல் கட்சிகளின் ஐக்கியத்தின் தமது செல்லப்பிள்ளை அரசியலிற்காகவோ, சுயநலத்திற்காகவோ, தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஐக்கியத்தை நாசமாக்கி இருக்க மாட்டார்கள்.


தெற்கில் உள்ள சிங்கள பௌத்த அரசியல்வாதிகளின் மதிநுட்பம், ராஜதந்திரம், அரசியல் காய் நகர்த்தலின் திறமையை, விமோசனம் கிடையாது நாசம் செய்கிறார்கள். இவர்கள் தமக்கு தோல்விக்கு மேல் தோல்வி கண்டதை தொடர்ந்து, ஐக்கியம் பற்றி பேசுவதன் முக்கிய நோக்கம், கிளிநொச்சி வாத்தி யாருக்கும் கட்சிக்குள் உலை வைப்பதே.

2009ம் ஆண்டு மே மாதத்தின் பின்னர், குறைந்தது பதின்மூன்றாவது (13) திருத்த சட்டத்தை தன்னும் முற்று முழுதாக பெறுவதன் மூலம், நாம் எமது - காணி, பூமி, சமூக, பொருளாதார, கலை கலாச்சாரத்தை, எமது தாயக பூமியான வடக்கு கிழக்கில், தமிழ்மக்கள் தமது கொள்கையை அடைவதற்கான ஓர் சுபீச்சமான எதிர்காலத்தை கட்டியெழுப்பியிருக்க முடியும். ஆனால் இன்றைய நிலை தையிட்டி புத்த விகாரையுடன் உள்ளது.

எமது தேர்தல்வாதிகள், தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் மார்பு தட்டும் விதங்களை கவனிக்க வேண்டும் :

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்சாவும் குடும்பத்தினரும் கூறினார்கள் - நாம் போரை வென்றோம், பயங்கரவாதத்தை ஒழித்தோம். அடுத்து 2015ல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் - குடும்ப ஆட்சியை ஒழித்தோம், ஊழலை ஒழித்தோம், நல்லாட்சியை ஏற்படுத்தினோம். இதே வேளை, முஸ்லீம் அரசியல் கட்சியினர் கூறுகின்றனர் - எமது பிரதேசங்களில் மக்களின் வாழ்வாதாரங்களை முன்னோற்றினோம், எமது மக்களிற்காக இரவு பகலாக உழைக்கிறோம். மலையக அரசியல் கட்சிகள் கூறுகின்றன, எமது மக்களின் ஏழ்மை நிலைகளை ஒழிக்கிறோம், வாழ்விடங்களை புதுப்பிக்கின்றோம் இன்னும் பல செய்வோம்.

**'மக்களை பற்றிய சிந்தனை அறவே அற்று, தமது செல்வாக்கு, புகழ், யாவற்றையும், வாக்கு வங்கியை நோக்கி பயணிப்பவர்கள். இவ் தேர்தல்வாதிகளிற்கு, கூடிய விரைவில், பல்கலைக்கழக மாணவ மாணவிகளிடமிருந்து நல்ல பதில் கிடைக்கும் என்பதே எமது நம்பிக்கை.'**




தமிழ் தேர்தல்வாதிகள் நிட்சயம் மீளய்வு செய்வது அவசியம். தமிழ் விடுதலைக்கான ஆயுத போரட்டத்தை இவர்கள் வெற்றி கொள்ள முடியாத நிலையில் - முதலில் சர்வதேசத்தை நாடினார்கள், பின்னர் வன்னியில் வாழ்ந்த மக்களின் தொகையை தொண்ணுறு வீதம் குறைத்து பொய்கள் கூறுவது போன்ற கபடமான வேலைகளை செய்து, சர்வதேசத்திடம் தமக்கு தேவையான ஆதரவை பெற்று விடுதலை போராட்டத்தை அழித்தார்கள். அது மட்டுமல்லாது இன்று வரை சர்வதேசம் ஏற்று கொண்ட சிறிலங்காவின் யாப்பில் உள்ள, 13வது திருத்த சட்டத்தை அறவே நடைமுறைபடுத்த அனுமதிக்காது நிலைமைகளை சமாளித்து கொள்கிறார்கள்.

ஆனால் எமது தேர்தல்வாதிகள், 'நான் தான் தலைவர், நான் சொல்வது சரி, என்னால் முடியாதது ஒன்றுமில்லையென பல விடயங்களை மிகைப்படுத்தி, தமிழ் மக்களிடையே நாட்டிலும் புலம் பெயர் வாழ் மக்களையும் குழப்பி, வெளிநாட்டில் அகதி அந்தஸ்து கோரிய தமது ஆதரவாழர்களிற்கு சீபாரிசு கடிதங்கள் கொடுத்தற்கு மேலாக, இவர்கள் இன்று வரை எவற்றை எதை தமிழ் மக்களிற்கு சாதித்து கொடுத்தார்கள்?

இவர்கள் யாராவது, சிங்கள பௌத்தர்கள், எதற்காக 13வது திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்தாது தடைகளிற்கு மேல் தடைகள் போட்டு, காலத்தை கழித்து வருகிறார்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்தது உண்டா? தமிழ் மக்களிடையே உள்ள, இவ் 'கோடாரீ காம்புகள், கறுப்பாடுகள்' தமிழ் மக்களிற்கு அரசியல் விடிவை தரமாட்டார்கள் என்பதை தமிழ் மக்கள் உணர வேண்டும்.

இதே இடத்தில் தமது அப்பாவி வாக்களார்களிற்கு, எமது வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் கூறுவதை கேளுங்கள். ஒற்றையாட்சிக்கு வெளியில் தீர்வு, ஒரு நாடு இரு தேசம், அரசியல் தீர்வு கிடைக்கும் வரை இடைகால தீர்வு, மத்தியில் கூட்டாச்சி மாநிலங்களிற்கு சுயாட்சி போன்று வரிசைபடுத்தி கொண்டு போகலாம். இன்று யுத்தம் முடிந்து பதினைந்து வருடங்களாகியும், இவர்கள் மக்களிற்கு எதை பயனுள்ளதாக செய்தார்கள்?

இன்று எமது நிலங்கள் பறிபோகும் அதேவேளை, அரசியல் பொருளதார, சமூக, கலாச்சாரம் வடக்கு கிழக்கில் நாளுக்கு நாள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், மக்களிற்கு தேர்தல்வாதிகளால் என்ன பிரயோசனம்?

தொடர்ந்து எமது இனத்தை அழிவுப் பதைக்கு வழிவகுப்பதா? அல்லது எம்மிடம் உள்ளவற்றை, எமது மதிநுட்பத்தை பாவித்து, எமக்கு கிடைப்பவற்றை ஏற்றுக்கொண்டு முன்னேறுவதா? விடுதலை போராட்ட காலத்தில், தமிழீழ விடுதலை புலிகளின் நிலைப்பாட்டை இங்கு யாரும் ஊதரணமாக கொள்ள முடியாது. இவற்றிற்கு காரணங்கள் பல.

இன்று எமது நிலத்தை நேசிப்பவன், பாதுகாக்க விரும்புபவன், எமது யாதார்த்தமான நிலையை கவனத்தில் கொண்டு, உள்ளவற்றை கிடைப்பவற்றை கொண்டே முன்னேறுவார்கள். காரணம், தற்போது எமது இனத்தின் யாதார்த் நிலை என்னவெனில், எம்மிடம் - அரசியல், ஆயுத பலம் அறவே அற்ற நிலையில், இலங்கை தீவில் எமது ஈழத்தமிழர் வாழ்வு என்பது இன்னும் சில வருடங்களில் - இன்றைய பாலஸதீனியர்களின் நிலையை விட் மிக மிக மோசமான நிலையில் முடியலாம்.

சிறிலங்காவிடமிருந்து ஓர் அரை குறை தீர்வான, யாப்பில் உள்ள 13வது திருத்த சட்டத்தை உடன் நடைமுறை படுத்துங்களென இவ் தேர்தல்வாதிகள், ஒருமித்த கருத்தாக சிங்கள பௌத்த அரசிற்கு கூறுவதில் தற்பொழுது இவர்களிற்கு என்ன தடையுள்ளது?

இவர்களில் சிலர் கூறும், ஒரு அரசியல் தீர்வை பெற்றால், நாம் தொடர்ந்து போராட முடியாது என்பது 'குழந்தை பிள்ளை கதை'. அப்படியானால் இன்றை பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்து. ஸ்பெயினில் கத்தலோன், பாஸ்நாடு போன்ற விடுதலை போராட்டங்கள் இத்தாலியில் லாம்பாட், சிசிலீ ஈராக்கில் குருடிஸ்தான் போன்று உலகில் பல உதாரணங்கள் உள்ளதை இவ் அரசியல்வாதிகள் அறியவில்லையா?

எமது கொள்கை நிலையானது. இதை இன்றைய சூழ்நிலையில் அடைவதற்கு ஓர் தற்காலிய அரசியல் தீர்வு வேண்டும் என்பது யாதார்த்தம். எமது கொள்கையை அடைவதற்கான மாற்று வழிகள் மூலம் பயணிக்கலாம் என்ற வார்த்தைகளை இவர்கள் கேள்விப்படவில்லையா?

அடுத்து, ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள், தமது இன்னுயிர்களை தனிநாடு என்ற ஒரே கொள்கைக்காகவே தியாகம் செய்துள்ளனர். அதே வேளை, பாலர் தொடக்கம் முதியோர் வரை, லட்சக்கணக்கனா தமிழ் மக்களது உயிர், விடுதலைபோராட்ட காரணிகளினால் பறிக்கப்பட்டுள்ளது.

ஆனால் நாம் தொடர்ந்து பேரம் பேசுவதற்கு எம்மிடத் முன்பிருந்த நிர்வாக பிரதேசமோ, ஆயுத, அரசியல் பலமோ இன்றில்லை என்பதை இவ் தேர்தல்வாதிகள் உணர வேண்டும்.

இதேவேளை, சிங்கள இராணுவமும் மற்றைய படைகளும் வடக்கு கிழக்கின் மூலை முடுக்கெல்லாம் உள்ள நிலையில், தமிழ் தேர்தல்வாதிகளும், புலம் பெயர் தேசத்தில் சிலரும் மிக பாதுகாப்பாக இருந்து கொண்டு, உணர்ச்சிவச அரசியலையும், கபடமான வீரத்தையும் பேசி, மிஞ்சியிருப்பவற்றையும் பறி கொடுக்க வழி தேடுகிறார்களா? அல்லது சர்வதேசத்தினால் முன் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வை தன்னும் பெற்றுக் கொண்டு தொடர்ந்து முன்னேறப் போகிறோமா என்பதை யாவரும், சிந்திக்க வேண்டும்.

ஆகையால் யதார்த்தை புரிந்து நாம் எமது அரசியலை ராஜதந்திர ரீதியாக முன்னெடுப்பதன் மூலமே, எம்மால் மீண்டும் எமது மண்ணில் கால் பதிக்க முடியும். இதன் மூலமே எமது லட்சியத்தை நாம் எதிர்காலத்தில் அடைய முடியும்.

உண்மையை கூறுவதனால் "ஒற்றுமையின்மை" என்பது தமிழ் அரசியல்வாதிகளெனப்படும் தேர்தல்வாதிகளிடம் பரவும் ஒரு பயங்கர நோய். தாங்கள் தேர்தல்களில் வெல்ல வேண்டும் என்பதே இவர்களது முக்கிய நோக்கம். மக்களை பற்றிய சிந்தனை அறவே அற்று, தமது செல்வாக்கு, புகழ், யாவற்றையும், வாக்கு வங்கியை நோக்கி பயணிப்பவர்கள். இவ் தேர்தல்வாதிகளிற்கு, கூடிய விரைவில், பல்கலைக்கழக மாணவ மாணவிகளிடமிருந்து நல்ல பதில் கிடைக்கும் என்பதே எமது நம்பிக்கை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியுக்தியார் பதில்கள்

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தில் நிர்ணயிக்கப்பட்ட சதவீதத்தை பூர்த்தி செய்வதிலுள்ள சிக்கல்கள் மற்றும் வேட்பாளர்களின் ஆதார ஆவணங்கள் இல்லாமையாலேயே கணிசமான எண்ணிக்கையிலான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளதே. அதாவது கேட்கப்பட்ட - அல்லது தேவையான விடயங்களை பூர்த்தி செய்யாததால்தான் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்றால், அதனை சரியாச் செய்யத் தெரியாதவர்கள் உள்ளூராட்சி சபைகளில் பிரதிநிதிகளாக வந்தாலும் இப்படித்தானே தமது வேலைகளைச் செய்திருப்பார்கள்? இவர்களைப் போன்றவர்களின் நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டது நல்லது என்று நீங்கள் கருதியதுண்டா?

**வியுக்தியார்:** வேட்பாளர்கள் எல்லோரும் நியமனப் பத்திரங்கள் தயாரிப்பதில் பணியாற்றியிருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் இதனை கட்சியின் முக்கியஸ்தர்கள் தான் செய்திருப்பார்கள். அவர்கள் செய்த தவறுகளுக்காக வேட்பாளர்களை ஒட்டுமொத்தமாக குறைசெல்லக்கூடாது. தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அவ்வப்போது கட்சிகளுக்கு சொல்லவேண்டிய விடயங்களை 'வட்ஸ் அப்பில் குறூப்' ஒன்றை உருவாக்கி அதன்மூலம் தகவல்களை பரிமாறி வந்திருக்கின்றது. அதனை கட்சியின் முக்கியஸ்தர்கள் ஒழுங்காக பார்க்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. அதிகம் ஏன் சில கட்சிகளின் தலைவர்கள் 'வட்ஸ் அப்பே' பாவிப்பதில்லையே. அவர்கள் எல்லாம் தற்கால அரசியலுக்கு தேவையற்றவர்கள். அவர்கள் தாங்களாகவே ஒதுங்கியிருக்கவேண்டும். ஆனால் என்னசெய்வது தாங்களே சாகும்வரை தலைவர்களாக இருக்கவேண்டும் என்று பிடிவாதமாக அவர்கள் இருப்பதுதான் தமிழ் மக்களின் சாபக்கேடு. தேர்தல் என்றால் இதுபோன்ற தவறுகள் எற்படுவதும் தவிர்க்க முடியாததுதான். ஒவ்வொரு தேர்தல்களிலும், தபால்மூலம் வாக்களிக்கின்ற வாக்குகளிலேயே செல்லாத வாக்குகள் இருக்கின்றன என்றால், அதனை செய்தவர்கள் அரச உத்தியோகத்தர்களும் படையினர், பொலிஸாரும்தானே. ஆக, தவறுகள் ஏற்படுவது தவிர்க்கமுடியாததுதான்.

---

**சபா. சிவநாதன்**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**



**கேள்வி:** பெரும்பாலான எதிர்க்கட்சிகள் குறிப்பாக, ஐக்கிய மக்கள் சக்தி ஐ. எம்.எவ். வை தங்கள் உண்மை யான அன்பு என்று நினைத்தன. இருப்பினும், ஐ. எம்.எவ். அவர்களை கைவிட்டு, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை மிகவும் திறமையானவராக ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் தான், சர்வதேச நாணய நிதி யத் தலைவர், அநுர குமாரவை துணிச்சலானவர் என்று கூறினார் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டி ருக்கிறாரே. ஐ.எம்.எவ். பாராட்டுகின்றது என்றால் அது பெருமைக்குரியது என்று நீங்களும் கருதுகின்றீர்களா?

**வியுக்தியார்:** நான் கருதுவது இருக்கட்டும், இந்த ஜேவிபியினரே ஐஎம்எவ்வை அமெரிக்காவின் விருப்பத்திற்கு ஏற்றவகையில், அவர்களின் கைக்கூலிகளாக பணியாற்றுபவர்கள் என்று ஒருகாலத்தில் கூறிவந்தது தான் எனது மனதிலும் வலிமையாக பதிர்ந்திருக்கின்றது. நானும் அதனைத்தான் இதுவரையில் நம்பிக்கொண்டிருந்தேன். அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப உலகமயமாதல் கொள்கைளை உலகம் எங்கும் திணிப்பதில் இந்த உலக வங்கியும் ஐ.எம்.எவ்வும் பணியாற்றுவதாகத்தான் நானும் இதுவரை நம்பிக்கொண்டிருந்தேன். பிமல் ரத்தநாயக்காவின் இந்தக் கருத்தைக் கேட்ட பின்னர்தான் எனக்குள்ளும் பல கேள்விகள் வந்தன. ஐ.எம்.எவ். தலைவர் நமது ஜனாதிபதியை துணிச்சலான தலைவர் என்று பாராட்டியிருப்பதும், ஒரு காலத்தில் அதனை அமெரிக்க ஆதரவு நிறுவனம் என்று கடுமையாக விமர்சித்த ஒருவர், இப்போது அது சொல்வதையெல்லாம் கேட்டு நடப்பதால்தான் அவரை துணிச்சலான தலைவர் என்கிறாரோ தெரியவில்லையே.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** இதுகாலம் வரை தங்களை தமிழ் தேசியத்தின் 24 கரட் தங்கங்கள் என்று கூறிவந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், இப்போது வேறு சிலருடன் சேர்ந்து புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கியுள்ளனரே. அந்த புதிய கூட்டணி யில் சிறீகாந்தா - சிவாஜிலிங்கம் தலைமையிலான தமிழ்த் தேசியக்கட்சி, ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், சட்டத்தரணி கே.வி.தவராஜா தலைமையிலான ஜனநாயக தமிழரசு கட்சி, தமிழ் மக்கள் கூட்டணியிலிருந்து விலகிய க. அருந்தவபாலன் ஆகியோர் இணைந்துள்ளனர். அப்படியெனில் இவர்களும் 24 கரட் தமிழ் தேசியவாதிகள் என்று முன்னணி இப்போது நம்புகின்றதா? அல்லது முன்னணியினர் இப்போது 22 கரட் ஆகிவிட்டார்களா?



**வியுக்தியார்:** அரசியல் என்றால் தேவை ஏற்படும் போது இப்படி மாற்றித்தான் ஆகவேண்டும். தமிழ் மக்கள் பேரவை என்ற பெயரில் விக்னேஸ்வரனை முன்னிலைப்படுத்தி ஓர் அமைப்பு இயங்கியது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அப்போது அவர்கள் நடத்திய 'எழுக தமிழ்' கொண்டாட்டத்திற்காக வீதியில் நின்று கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சுரேஸ் பிரேமச்சந்திரனும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்தபோது அவர்களிடம் துண்டுப்பிரசுரத்தை நானும் பெற்றுக்கொண்டேன். ஆனால் அந்த அமைப்பு கொஞ்ச நாட்களிலேயே காணாமல்போக, அடுத்துவந்த உள்ளூராட்சி தேர்தலில் இருவரும் தனித்தனியாக போட்டியிட்டபோது, சுரேஸ் பிரேமச்சந்திரன் இந்தியாவின் அடிவருடி என்று பொன்னம்பலம் விமர்சித்ததையும் நாம் பார்த்தோம். அதுபோலத்தான், இப்போது அவர்களுடன் இணைந்துகொண்டவர்களைப்பற்றியும் இவர்கள் முன்னர் எப்படி விமர்சித்தார்கள் என்பது நமக்குத் தெரியும்தானே. அந்தக் கூட்டணி பற்றி என்ன விமர்சனங்கள் இருந்தாலும், முன்னணி இப்போது சற்று இறங்கிவந்திருப்பது பாராட்டுக்குரியதுதானே. இதற்கெல்லாம் காரணமான தேசிய மக்கள் சக்திக்கு தான் தமிழ் தேசிய ஆதரவாளர்கள் நன்றி சொல்லவேண்டும்.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**



**கேள்வி:** இலங்கை இராணுவத்தால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட ஜே. வி.பியின் பிறேமாவதி மன்னம்பேரி, இசைப்பிரியா உள்ளிட்டோருக்கான நீதி எப்போது கிடைக்கும் என்று நமது எம். பி. சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளாரே. அவர் ஜே.வி.பி.யின் மன்னம் பேரி என்றார் அது சரி, அவருடன் சேர்த்து இசைப்பிரியாவையும் ஜே.வி.பியின் இசைப்பிரியா என்கிறாரா? அல்லது விடுதலைப் புலிகளின் இசைப்பிரியாவை பற்றி கதைக் கும் போது ஜே.வி.பியின் மன்னம்பேரியையும் சேர்த்து சொன்னால் அது கவனம்பெறும் என்று இருவரையும் சேர்த்து சொல்லியிருப்பாரோ?

வியுக்தியார்: அவர் எதற்காக இருவரையும் சேர்த்து சொன்னார் என்று அவருக்குத்தான் தெரியும். ஆனால், அவரது கவனம் எல்லாம், வடக்கில் உள்ளூராட்சி தேர்தலையொட்டி சுமந்திரன் முன்னிலையில் இருப்பதும், அவரே தமிழ் அரசு கட்சி போல காணப்படுவதும் அவருக்கு ஜீரணிக்கக்கூடியது அல்ல. அதனால் தானும் கவனம்பெறவேண்டும் என்பதற்காகவே பாராளுமன்றில் இதுபோன்ற பேச்சுக்களைப் பேசுகிறாரோ தெரியவில்லை. அர்ச்சுனா எம்.பி.யை பாராளுமன்றில் பேசுவதற்கு தடைவிதித்தபோதும், அதனையும் இனவாத முலாம்பூசி தனது கவனத்தை திருப்பியிருந்தார். அவருக்கு மன்னம்பேரி பற்றி தெரிந்திருந்திக்கின்றது. ஆனால் மன்னம்பேரி கொலை செய்யப்பட்டபோது தடைசெய்யப்பட்ட ஓர் அரசியல் இயக்கத்தின் பிரதிநிதி. ஆனால், இசைப்பிரியா அப்படியல்ல. அதற்காக இசைப்பிரியாவிற்காக நீதிகோரி பாராளுமன்றத்தில் உரையாற்றக்கூடாது என்று நாம் சொல்ல வரப்போவதில்லை. அவரின் மரணத்திற்கு நீதிகேட்டு சர்வதேச மன்றங்களில் வாதிடவேண்டும் என்று வலியுறுத்துபவர்கள் நாங்கள். ஆனால் அவரது நீதிக்காக மன்னம்பேரியை துணைக்கு அழைத்திருக்கவேண்டியதில்லை.

---

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி போட்டியிடாது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி ஐயா அறிவித்துள்ள அதேவேளையில், அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டு தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்க முன்வர வேண்டும் என்றும் வேறு ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரளவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்திருப்பது ஆச்சரியமானதுதான். அவர் இதுகால வரை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்றால் அனைத்துக்கட்சிகளும் தனது கட்சியில் சேரவேண்டும் என்றுதான் கோரிக்கை விடுத்துக்கொண்டிருந்தார். இப்போதுதான் முதல்தடவையாக சற்று வித்தியாசமாக ஓரணியில் திளரவேண்டும் என்கிறார். அதுவல்ல முக்கியமானது, நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி தேர்தலில் அவரது கட்சி போட்டியிடுவதற்கு கட்சிக்கு யார் இப்போது தலைவர் என்பது அவருக்கே தெரிந்திருக்குமோ தெரியவில்லை. இந்த லட்சணத்தில் கட்சி எப்படி தேர்தலில் போட்டியிடுவது?. தந்தை செல்வா தொடர்க்கி வைத்த அந்தக் கட்சியின் நிலையை நினைத்து கவலைப்படுவதா அல்லது தமிழ் மக்களை நினைத்து கவலைப்படுவதா என்றுதான் தெரியவில்லை.

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**



**கேள்வி:** பட்டலந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கையை அரசாங்கம் தீர்மானிக்கப் போவதில்லை என்றும் மாறாக சட்ட அமுலாக்க நிறுவனங்களே அதனைத் தீர்மானிக்கும் என்றும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளாரே. அதாவது யார் அதன்மூலம் இலக்கு வைக்கப்பட்டாலும், அது அரசாங்கம் செய்யவில்லை என்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களே செய்கின்றன என்றும் சொல்வதற்கு முயற்சிப்பதாக தெரிகின்றது. இத்தனை காலம் கிடப்பில் கிடந்த இந்த அறிக்கை இப்போது ஏன் தூசிதட்டி எடுக்கப்பட் டிருக்கின்றது என்று நினைக்கிறீர்கள்?

**வியுக்தியார்:** பட்டலந்தை என்றதும் அனைவருக்கும் நினைவிற்கு வருபவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் என்பது இரகசியமானது அல்ல. பட்டலந்தவில் இயங்கியதாகக் கூறப்படும் அந்த இரகசிய முகாம் பொலிசாராலேயே இயக்கப்பட்டது. ஆக, அப்போது அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சரும் அல்ல. ஆனால் அந்த அறிக்கையில் அவர் அமைச்சராக இருந்துகொண்டு தனக்கு அதிகாரம் இல்லாத போதும் பொலிசார் அந்த கட்டத்தை பயன்படுத்த அனுமதி வழங்கியது தவறு என்று மட்டுமே அறிக்கையில் ரணில் மீது குற்றம்சாட்டப்பட்டிருக்கின்றதாம். ஆனாலும் அப்போது பிரதமராக இருந்தவர் தற்போ தைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவின் தந்தை. யாரும் இதுவரை அவர் பற்றி வாய்திறக்க வில்லை. இத்தனை காலம் கிடப்பில் கிடந்த இந்த அறிக்கை ஏன் இப்போது எடுக்கப்பட்டிருக்கின்றது என்ற கேள்வி எழுவது நியாயமானதுதான். அரசாங்கம் இப்போதிருந்தே அடுத்த ஜனாதிபதி தேர்தல் பற்றியும் கவனிக்கத் தொடங்கிவிட்டது என்பதும் ஒன்றும் இரகசியமானது அல்ல. அந்தத் தேர்தலில் தங்களை எதிர்த்து போட்டியிடக்கூடிய பிரதான வேட்பார்களில், கடும் போட்டியை ஏற்படுத்தக்கூடியவராக அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவைத்தான் கருதுகிறார்களோ தெரியவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட முடிவெடுத்தால், அவரோடு யாரும் கட்சியில் இருப்பார்களோ தெரிய வில்லை. ரணில் ஏன் குறிவைக்கப்படுகின்றார் என்ப தற்கு விளக்கம் தேவையிருக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# ட்ரம்பின் இரட்டை முகம் :

# காசாவில் மீண்டும் யுத்தம் ! உக்ரைனில் உடனடி அமைதி !!

போர் நிறுத்தம் மேலும் நீடிப்பதற்கு முன்னராகவே, காசாவில் ஓர் தாக்குதலில் 413 பாலஸ்தீனர் கொன்று குவிக்கப்பட்டனர். இது வெறும் ஆரம்பம் தான் என இஸ்ரேல் பிரதமர் எக்காளமிட்டு எச்சரித்துள்ளார். இந்த கொடூர தாக்குதலுக்கு அமெரிக்காவும் ஒத்திசைத்து ஆமோதித்தது என்றும் கூறப்படுகிறது.

பாலஸ்தீனர்களுடன் இனிமேல், பேச்சுவார்த்தைகள் துப்பாக்கிச் சூட்டின் கீழ் மட்டுமே நடைபெறும் என்று இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு மேலும் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தில் கொடூர போருக்கு ஆதரவாக இஸ்ரேலை ஊக்குவிக்கும் விதமாக அமெரிக்க அரசும், ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகமும் செயல்பட்டு வருகின்றன.


ஆனால் உக்ரைனில் உடனடியாக போர் நிறுத்தத்தை அமல்படுத்த வேண்டும் என்று ட்ரம்ப் வலியுறுத்தி வருகிறார். போர் நிறுத்த கோரிக்கை இரு தரப்பாலும் நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் இதுவரை முழுமையான யுத்த நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை.

இரு போர்க்களத்திலும் அமெரிக்காவும், ட்ரம்ப் அரசும் இரட்டை முகத்தினை வெளிப்படுத்தி வருகின்றன.

இஸ்ரேலிய வான் படையின் தாக்குதலில் 413 பாலஸ்தீன மக்களின் உடல்கள் கிடைத்துள்ளதாகவும் பல உடல்கள் இன்னும் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர் நிறுத்தம் கடந்த மார்ச் 1 ஆம் தேதி முடிவடைந்த நிலையில் காசா மீது இஸ்ரேல் மேற்கொண்ட கொடூரமான தாக்குதலில் இதுவரை கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஆயினும் காசா சுகாதார அமைச்சக அதிகாரிகள் அறிவிப்பின்படி, இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 413 பேரின் உடல்கள் கிடைத்துள்ளதாகவும் பல உடல்கள் இன்னும் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளன என தெரிவித்துள்ளது.



பாலஸ்தீனத்தில் கொடூர போருக்கு அமெரிக்க ட்ரம்ப் நிர்வாகம் இஸ்ரேலை ஊக்குவிக்கிறது. ஆனால் உக்ரைனில் உடனடி போர் நிறுத்தத்தை ட்ரம்ப் வலியுறுத்தி வருகிறார். இரு போர்க்களத்திலும் அமெரிக்காவும், ட்ரம்ப் அரசும் போலியான இரட்டை முகத்தினை வெளிப்படுத்தி வருகின்றன.

கோரமான இந்த தாக்குதலுக்குப் பிறகு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு புதிய எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். கடந்த 24 மணி நேரத்தில் ஹமாஸ் எங்கள் கையின் வலிமையை ஏற்கனவே உணர்ந்துள்ளது.

இது வெறும் ஆரம்பம் மட்டுமே என்று நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். இஸ்ரேல் ஹமாஸுக்கு எதிராக அதிக பலத்துடன் செயல்படும். இனிமேல், பேச்சுவார்த்தைகள் துப்பாக்கிச் சூட்டின் கீழ் மட்டுமே நடைபெறும் என்று நேதன்யாகு மிகக் கடுமையாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட அமைதி உடன்படிக்கையின்படி இஸ்ரேலிய பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டு வந்தனர். ஆனால் போர் நிறுத்தம் முடிந்ததும் மேற்கொண்டு தொடர்ந்த அமைதி பேச்சுவார்த்தை இழுபறியில் உள்ளது.

ஹமாஸ் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிக்க பலமுறை மறுத்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டதாக இஸ்ரேல் கூறியிருந்தது. இந்த நிலையில்தான் இஸ்ரேலின் இந்த படுகொலை தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

ஹமாஸ் தன்வசம் இன்னும் 59 இஸ்ரேலிய பணய கைதிகளை வைத்துள்ளது. இந்நிலையில் தற்போதைய காசா தாக்குதல் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஹமாஸ், சண்டையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நிரந்தர தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சிகளை இஸ்ரேல் தடுக்கிறது என்று தெரிவித்துள்ளதுடன், இஸ்ரேலின் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்காவை அழுத்தம் கொடுக்குமாறு வலியுறுத்தி உள்ளது.

அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்திய முயற்சியில் உருவான போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறியடிக்க தற்போது இஸ்ரேல் முடிவு செய்துள்ளது. ஆனால் இஸ்ரேல் வன்முறையை மீண்டும் தொடங்கினால் மீதமுள்ள உயிருள்ள பணயக்கைதிகளுக்கு மரண தண்டனை விதிக்க நேரிடும் என ஹமாஸ் எச்சரித்துள்ளது.

இதற்கிடையே 400 பேரை கொன்ற இந்த தாக்குதல்களைத் தொடங்குவதற்கு முன்பு இஸ்ரேல் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் நிர்வாகத்திடம் ஆலோசித்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் கூறுகையில், மீண்டும் போர் தொடங்குவதற்கு ஹமாஸ் முழுப் பொறுப்பையும் ஏற்கிறது என்று அமெரிக்க செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

காசாவில் போர் தொடர்கையில், உக்ரைனில் யுத்த நிறுத்தம் ஏற்பட அமெரிக்கா தீவிரமாம முயல்கிறது. அமெரிக்க முன்வைத்த போர் நிறுத்த திட்டத்தை ரஷ்யா - உக்ரேன் நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்வதாக முன்னர் அறிவித்து இருந்தன. ஆனாலும் இதுவரை இப்போர் முடிவுக்கு வர ரஷ்யாவோ அல்லது உக்ரைனோ தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளவில்லை என்பது தெட்டத் தெளிவாக தெரிகிறது.

ஏனெனில் இருதரப்பும் முன்னைய போர் நிறுத்த காலத்தில் தம்மை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இது இம்முறையும் வெளிப்படையாகவே தெரிகிறது.

ஆனாலும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் விவரங்கள் விவாதிக்கப்பட வேண்டும் என்றும் எந்தவொரு போர் நிறுத்தமும் நீண்டகால அமைதிக்கு வழிவகுக்க வேண்டும் என்றும் புட்டின் கோரியுள்ளார். அத்துடன் போரின் நெருக்கடியின் காரணங்களை நீக்கும் வகையில் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ரஷ்ய அதிபர் புட்டினுடன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

புட்டினின் சாதகமான பதில் மிகவும் நம்பிக்கைக்குரியதாக உள்ளது என்றும் ட்ரம்ப் தெரிவித்தார்.

ஏற்கனவே ரஷ்யாவுடனான போரில் உடனடி முப்பது நாள் போர் நிறுத்தத்திற்கான அமெரிக்க முன்மொழிவை ஏற்கத் தயாராக இருப்பதாக உக்ரைனும் கூறியுள்ளது. ●

# மனிதப் பேரவலம்!

மேற்காசியாவின் காஸா உள்ளிட்ட பாலஸ்தீனப் பகுதியை தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள ஹமாஸ் இயக்கத்தினருடன் செய்து கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, கடந்த செவ்வாய்க்கிழமை இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 400-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ஹமாஸ் இயக்கத்தினரைக் குறிவைத்தே இந்தத் தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் கூறினாலும், இதில் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகள் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 1948-க்கும் முன்னர் வரை பாலஸ்தீனப் பகுதியானது பிரிட்டனின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது. ஜெர்மனி நாட்டின் சர்வாதிகாரி ஹிட்லரின் அதிரடி நடவடிக்கையால் உயிருக்குப் பயந்து அந்த நாட்டிலிருந்து வெளியேறிய யூதர்கள் அகதிகளாக பல்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். இத்தகைய சூழலில், அகதிகளாகப் பரிதவித்த யூத மக்கள் அனைவரும் அமெரிக்காவின் தலையீட்டால் பாலஸ்தீனத்தின் மற்றொரு பகுதியில் குடியமர்த்தப்பட்டனர்.

ஏற்கெனவே பாலஸ்தீனப் பகுதியில் நீண்ட காலமாக வசித்து வரும் இஸ்லாமிய மக்களுக்கும், புதிதாகக் குடியமர்த்தப்பட்ட யூதர்களுக்கும் இடையே அவ்வப்போது பிரச்னைகள் எழுந்தன. இதையடுத்து, யூதர்கள் குடியமர்த்தப்பட்ட பகுதியை தனி நாடாக, அதாவது இஸ்ரேல் என்ற புதிய நாட்டை உருவாக்க அமெரிக்கா முன் முயற்சிகளை மேற்கொண்டது. அமெரிக்கா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, இஸ்ரேல் நாட்டுக்கு ஐ.நா. சபையின் அங்கீகாரத்தையும் பெற்றுத் தந்தது.

ஆனால், இஸ்லாமியர்கள் நீண்ட காலமாக வசித்து வரும் பகுதிகளை உள்ளடக்கிய பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க வேண்டும் என இந்தியா உள்ளிட்ட அணிசாரா நாடுகள் குரல் கொடுத்தன. ஆனால், இதற்கு ஐ.நா.சபையின் அங்கீகாரம் கிடைக்காததால், பாலஸ்தீன பிரச்னை இன்னமும் நீடித்து வருகிறது.

யூதர்கள் தங்களது கடின உழைப்பால் இஸ்ரேல் நாட்டை செல்வ வளமிக்க முன்னணி நாடாக கட்டமைத்தனர். உலகின் சக்தி வாய்ந்த நாடான அமெரிக்காவின் ஒத்துழைப்புடன், இஸ்லாமியர்கள் வசித்து வரும் பாலஸ்தீன பகுதிகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இஸ்ரேல் பல ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. இஸ்ரேலின் இந்த முயற்சிகளுக்கு முட்டுக் கட்டை போடும் விதத்தில், இஸ்லாமிய மக்களைக் காப்பதாகக் கூறிக் கொண்டு உருவானவைதான் ஹமாஸ், ஹூதீஸ் போன்ற இயக்கங்கள்.

இஸ்ரேலுக்கும், இந்தப் இயக்கத்தினருக்கும் இடையே அவ்வப்போது சண்டைகள் நடைபெறுவது வழக்கமானதுதான். இந்த நிலையில், கடந்த 2023-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் ஹமாஸ் படையினர் ஆயிரக்கணக்கான ஏவுகணைகளால் திடீர் தாக்குதல் நடத்தி, இஸ்ரேலின் ராணுவ கட்டமைப்புகளைத் தகர்த்தனர்.

உலகின் மிகப் பலம் வாய்ந்த உளவு அமைப்பைக் கொண்ட இஸ்ரேல், ஹமாஸ் படையினரின் இந்தத் திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. ஏற்கெனவே பொதுமக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்திருந்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இதை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ஹமாஸ் படையினரை ஒட்டுமொத்தமாக அழிப்பதுதான் தனது முதல் பணி என சூளுரைத்தார்.

இதையடுத்து, நெதன்யாகுவின் உத்தரவின்பேரில், ஹமாஸ் இயக்கத்தினரை ஒழித்துக் கட்டுகிறோம் என கூறிக் கொண்டு, காஸாவில் பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்புகள், மருத்துவமனைகள் மீது இஸ்ரேலியப் படையினர் கடந்த 2023, அக்டோபரிலிருந்து கடும் தாக்குதலை நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதலில் இதுவரை 48 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகவும், சுமார் ஒரு லட்சம் பேர் காயமடைந்ததாகவும் காஸா சுகாதாரத்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், அமெரிக்கா, கட்டார், எகிப்து ஆகிய நாடுகளின் முன்முயற்சியால், இஸ்ரேலுக்கும், ஹமாஸ் படையினருக்கும் இடையே கடந்த ஜனவரி மாதம் 19-ஆம் தேதி போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி, இரு தரப்பினரும் தாங்கள் பிடித்துவைத்துள்ள பிணைக் கைதிகளை பரஸ்பரம் விடுவித்து வந்தனர்.

ஆனால், முதலில் செய்து கொண்ட இந்த ஒப்பந்தத்தில் சில மாற்றங்களைச் செய்ய ஒப்புக்கொண்டால்தான் போர் நிறுத்தம் நீடிக்கப்படும் என இஸ்ரேல் நிபந்தனை விதித்தது. இதற்கு ஹமாஸ் படையினர் ஒப்புக்கொள்ளாததால், இஸ்ரேல் கடந்த செவ்வாய்க்கிழமை திடீர் தாக்குதலை நடத்தியது.

அமெரிக்காவுடன் ஆலோசித்த பிறகே, இந்தத் தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் வெளிப்படையாகக் கூறியுள்ளது. பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் இன அழிப்பை மேற்கொண்டு வரும் இஸ்ரேலைக் கண்டிக்க உலக நாடுகள் முன்வராதது ஆச்சரியமளிக்கிறது.

இஸ்ரேலின் இந்த மனித நேயமற்ற, கொடூரமான தாக்குதல்களால் சொல்லொண்ணா துயரங்களை அனுபவித்து வரும் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் சபையாலும் எதுவும் செய்ய இயலவில்லை. ஐ.நா.வின் மனிதாபிமான உதவிகள் பாலஸ்தீன மக்களுக்கு கிடைப்பதையும் இஸ்ரேல் தடுத்து வருகிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “பலஸ்தீன மக்களின் விடுதலை அனைத்து மக்களின் விடுதலையுடனும் இணைந்தது”

கொழும்பு, மார்ச்.23

பலஸ்தீன மக்களின் விடுதலையானது, இந்த உலகத்தில் வாழும் அனைத்து மக்களின் விடுதலையுடனும் ஒன்றிப்பிணைந்துள்ளது. எனவே, அதனை நாங்கள் வேறாகப் பார்க்க முடியாது என சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம் தெரிவித்தார்.

கொழும்பில் அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக நேற்று சுதந்திர பலஸ்தீன இயக்கம் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறி இஸ்ரேல் மீண்டும் தனது இனப்படுகொலையை ஆரம்பித்துள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இஸ்ரேலின் வன்முறையையும் காஸாவுக்கு எதிரான கூட்டு தண்டனையை நிறுத்தக்கோரியும், இனவெறி மற்றும் இனச்சுத்திகரிப்பு ஆகியவற்றுக்கு அமெரிக்கா நிதி வழங்குவது மற்றும் அதனுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளதை அம்பலப்படுத்தும் நோக்கத்துடனும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுவஸ்திகா மேலும் கூறுகையில்,

பலஸ்தீனிய தேசத்துக்கும் மக்களுக்கும் ஆதரவாக நாங்கள் இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

அதற்கு காரணம், போர் நிறுத்த உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் இந்த பயங்கரவாத இஸ்ரேலிய




அரசு, பலஸ்தீனிய மக்கள் மீதும் அந்த நாட்டின் மீதும் இன்னமும் வன்முறையையும், இன ஒழிப்பையும் நடத்திக் கொண்டிருக்கின்றது என்பது அனைவருக்கும் தெரியும்.

எனவே, அதனை கண்டிப்பதற்கும் மேலும் மேலும் பலஸ்தீனிய மக்கள் மீது வன்முறையை செலுத்த வேண்டாம் எனவும் போரை நிறுத்த வேண்டும் எனவும், பலஸ்தீன மக்களுக்கு உரித்தான நிலங்களை விடுவிக்குமாறும் கோரி நாங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்றோம்.

பலஸ்தீன நாட்டு மக்களுக்கு எதிராக நடத்தப்படுகின்ற குற்றங்களுக்கு எதிராகவும், போர்க்குற்றங்களுக்கு எதிராகவும், கைதுகளுக்கு எதிராகவும், அவர்களுடைய காணிகளை கைப்பற்றுவதற்கு எதிராகவும் நாங்கள் இலங்கையிலிருந்து எதிர்ப்பை தெரிவிக்கின்றோம்.

இஸ்ரேலுக்கும் அந்த நாட்டுக்கு ஆயுதங்களை வழங்கிக்கொண்டிருக்கின்ற, முற்றுமுழுதாக உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்ற அமெரிக்காவுக்கு எதிராகவும், இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்றோம் - என்றார். (எ)

# கோடாவுடன் ஒருவர் கைது

கம்பஹா, மார்ச்.23

கம்பஹா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெசெல்பத்தர பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் தயாரிக்க பயன்படுத்தப்படும் கோடாவுடன் சந்தேக நபர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கெசெல்பத்தர பிரதேசத்தில் வசிக்கும் 45 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து 1,080 லீற்றர் கோடா (6 பீப்பாய்கள்) பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ)

# கஞ்சா கடத்திய இருவர் சிக்கினர்

மொனராகலை, மார்ச்.23

மோட்டார் சைக்கிளில் கஞ்சா கடத்திச் சென்ற இருவர் எத்திமலை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எத்திமலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மொனராகலை - எத்திமலை பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் இருவரும் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 330 கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

# வார்த்தை வன்முறை...

(06ம் பக்கத் தொடர்ச்சி)

நெருங்க நெருங்க விவாதங்களும், விமர்சனங்களும் சூடுபிடிக்க ஆரம்பித்துவிடும். நாள்தோறும் காட்சி ஊடகங்கள் அனைத்தும் அரசியல் நிலைமை குறித்த நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. அது என்ன மாயமோ தெரியவில்லை. அவர்களுக்காகவே தினம் ஒரு பிரச்னை வந்துவிடுகிறது. பேசுபவர்கள் அனைவரும் தங்கள் கட்சிகளின் நிலைப்பாட்டை எடுத்துரைக்கிறார்கள். காரசாரமான விவாதங்கள் வார்த்தை தாக்குதல்கள் கட்டுக்கடங்காத கோபம் என அந்த விவாதம் வேறொரு பரிமாணம் எடுத்துவிடுகிறது. அவர்களைக் கட்டுப்படுத்த நெறியாளர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கத்தி கூச்சல் போடுகிறார்கள். சட்டென உணர்ச்சிவசப்படுகிறார்கள்.

மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் நிறுத்திக்கொண்டு பேச வேண்டுமல்லவா? இவர்கள் இடத்தில் அந்தந்த கட்சித் தலைவர்களே இருந்தால்கூட அவர்கள் இந்த அளவுக்குக் கூச்சல்போட மாட்டார்கள். கண்ணியம் காக்கப்படல் வேண்டும். கொள்கைக்காக கொடி பிடிக்கலாம். ஆனால், எவரையும் இழிவாகவோ, அநாகரிகமாகவோ தரம்தாழ்த்திப் பேசக் கூடாது.

வெறுப்பு அரசியல் என்னும் நோய்த்தொற்று அதிவேகமாக பரவிக் கொண்டிருக்கிறது. இது பகை அரசியலாக வளர்ந்திருக்கிறது. அவரவர் கருத்துகளைச் சொல்லட்டும். கருத்து வேறுபாடும், கருத்து முரணும் பகைக்கு வித்தாகிவிட வேண்டுமா? தவறான தகவல்களுடன் இணைந்த வெறுப்புப் பேச்சு, பெரிய அளவிலான வன்முறைக்கு வழிவகுக்கும்.

சென்ற தலைமுறை அரசியல் தலைவர்கள் கொள்கைகளில் மாறுபட்டார்கள். ஆனால், அதைத் தாண்டிய நட்பும், மரியாதையும் அவர்களிடையே இருந்தது. மேடை நாகரிகத்தை அவர்கள் மீறியதில்லை. தற்போது மேடையில் பேசுபவர்களும், சமூக ஊடங்களில் பேசுபவர்களும் மிகவும் எச்சரிக்கையுடன் பேச வேண்டும். தவறான ஒரு சொல் ஒரு பெரிய பிரளயத்தையே ஏற்படுத்திவிடும். இனியாவது, நம் அரசியல் களம் கொள்கைகளைப் பேசும் களமாக இருக்கட்டும்.

வீட்டு சண்டையின்போதும் சட்டென பேச்சு கடுமையாகிப் போய்விடுகிறது. வாய் வார்த்தை வளர்ந்து சர்ச்சைக்கு வித்திடுகிறது. கணவன்-மனைவி, மாமியார்-மருமகள், மருமகன்-மாமனார், சகோதர-சகோதரிகள் இடையே சண்டை வரும்போது அதை கவனிக்கும் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இது அவர்களின் மனநிலையைப் பாதித்து, படிப்பில் இருக்கும் நாட்டத்தையும் குறைத்துவிடுகிறது. வீட்டில் அமைதியான, இனிமையான சூழல் இருந்தால் மட்டுமே குழந்தைகளின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும்.

அனைவரும் எதிராளிக்கு சமமாக நின்று பேச முடியாது, பேசத் தெரியாது. சண்டை போடப் பிடிக்காத அவர்கள் சகித்துக் கொண்டு மௌனமாக இருந்து விடுவார்கள். யார் பக்கம் சரி, யார் பக்கம் உண்மை உள்ளது என்பது அபாண்டமாகப் பேசுபவருக்கும், அந்த ஆண்டவனுக்கும் தெரியும். அதுவே போதும். அவர்கள் ஓரளவுக்கு அடங்கிப் போகிறார்கள். ஒருகட்டத்தில் அவர்களும் பொங்கி எழுகிறார்கள். மிதிக்க மிதிக்க, நசுங்கிச் சாவதற்கு ஒருவரும் புழு அல்லவே. சொல்லுக்குச் சொல் சிங்காரம் எதற்கு? என்பார்கள். அதுபோல பதிலுக்கு தடித்த வார்த்தைகளை விட்டுவிடுகிறார்கள். அந்த நபர் இவர் சொன்னதை மட்டுமே அனைவரிடமும் சொல்லிச் சொல்லி பழிசுமத்துகிறார். சில சமயம் வாயடைத்துத்தான் போய்விடுகிறது. என்ன செய்ய?

பேச வார்த்தைகளற்று இருப்பது, அமைதி வார்த்தைகள் இருந்தும் பேசாமல் இருப்பது மௌனம். தொலைவை நிர்ணயிப்பது சாலைகள் மட்டுமல்ல் வார்த்தைகளும்தான். கூடுமானவரை அவர்களை மன்னித்து விடுவோம். மன்னிக்காத மனம் அமிலத்தைப் போன்றது. மனதை அரித்துவிடும்.

நட்புகூட குறைபாடுகளுடன்தான் இருக்கிறது. வாழ்வுகூட மன்னிக்கும் மனநிலையில் இருந்துதான் ஊற்றெடுக்கிறது. மன நிம்மதியுடனும், மனநிறைவுடனும் வாழவேண்டுமானால், கோபம் வரும்போது நம் வார்த்தைகளுக்குக் கடிவாளம் போட வேண்டும்.

# எங்களுக்கு அரசாங்கத்தின் ஆலோசனை அவசியமில்லை

## அநுரவுக்கு சஜித் பதில்

கொழும்பு, மார்ச்.23

கட்சி தாவும் கலாசாரம் குறித்து பேசுவதற்கு ஜே.வி.பியினருக்கோ அல்லது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கோ எந்த உரிமையுமில்லை. எனவே,

எங்களுக்கு இந்த அரசாங்கத்தின் ஆலோசனைகள் அவசியமில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“இன்று சமூகத்தின் சகல பிரிவைச் சேர்ந்த அனைவரும் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வரும் இவ்வேளையில், அந்த அசௌகரியத்தைப் பயன்படுத்தி, அந்த அசௌகரியத்தில் தவிக்கும் பிரிவினரைத் தூண்டிவிட்டு, அரசியல் வெற்றிகளைப் பெறுவதற்கும், அந்த அசௌகரியத்தைப் பயன்படுத்தி அத்தரப்பினரை மேலும் அடிமைகளாக்கவும் சிலர் முயற்சிக்கின்றனர். தெளிவான வேலைத்திட்டத்தோடு, சமூக ஜனநாயக கொள்கையிலமைந்த நடுத்தரப் பாதையைப் பின்பற்றி நாட்டையும் மக்களையும் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி செல்லும். சமூக ஜனநாயகம் மற்றும் மனிதாபிமான முதலாளித்துவ கொள்கையோடு ஐக்கிய மக்கள் சக்தி பயணிக்கிறது. தீவிர வலதுசாரி மற்றும் தீவிர இடதுசாரி கோட்பாடுகளை நாம் நிராகரிக்கின்றோம். எமது பாதை நடுத்தரப் பாதையாகும். எமது நாட்டுக்கு இந்தக் கொள்கையே சரியானது.

ஏற்றத்தாழ்வை பயன்படுத்தி, வெறுப்பை விதைத்து, பாதிக்கப்பட்ட மக்களை பலியாக்கும் வெறுப்பு அரசியலை சமூகத்தில் சில குழுக்கள் முன்னெடுத்து வருகின்றன. இந்த வெறுப்பு அரசியலுக்கு சமூகத்தில் பல கற்பிதங்கள் இருக்கின்றன. மக்கள் விடுதலை முன்னணியின் கொலைக் கலாசாரமும், தனியார், அரச சொத்துக்களுக்கு தீ வைத்து எரிக்கப்பட்ட விதமும், தொழிற்சாலைகள், வங்கிகள், கட்டடங்கள் சாம்பலாக்கப்பட்ட விதமும், சடலத்தைகூட எடுத்துச் செல்ல முடியாத அவலமும் என இந்தப் பட்டியல் நீள்கின்றன. இன்று சமூகம் இந்த சமூகவிரோத - தீவிரவாத செயல்பாடுகள் பற்றி பேசுகிறது. மறுபுறம் இந்த அழிவுகரமான கொலைக் கலாசாரத்தினால் எமது நாடு இழந்த முதலீடுகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பிலும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கடந்த சில நாட்களாக அரசாங்கம் குரங்கு கணக்கெடுப்பு நாடகத்தை நடத்தி மக்களை ஏமாற்றி விட்டு, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வரவு - செலவுத்திட்டத்தின் இறுதி உரையை ஆற்றும் போது ஐக்கிய மக்கள் சக்தியை இழுத்துப் பேசியிருந்தார். பக்கம் மாறும் கலாசாரம் எம்மவர் மத்தியில் இல்லை என்று ஜனாதிபதி தெரிவித்தார். விமல் வீரவன்ஷவிலிருந்து, மக்கள் விடுதலை முன்னணியினர், அமைச்சரவை பதவிகளை வகித்தவர்கள் கூட அரசியல் முடிவுகளை எடுத்தனர். எனவே, கட்சி தாவும் கலாசாரம் குறித்து பேசுவதற்கு ஜே.வி. பியினருக்கோ அல்லது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கோ எந்த உரிமையுமில்லை”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியில்...

பொதுவாக, சிறையில் அடைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் குறித்த சிறைச்சாலை அதிகாரிகளிடம் வெளியே இருந்து உணவைப் பெற கோரிக்கைகளை முன்வைக்கலாம்.

கோரிக்கையை சம்பந்தப்பட்ட சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

அதன்படி, தேசபந்து தென்னககோனும் இதேபோன்ற கோரிக்கையை விடுத்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, அவர் தும்பர சிறைச்சாலைக்கு வெளியே இருந்து உணவு பெற அனுமதிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

## இறக்குமதி...

அனுமதி வழங்கப்பட்டது.

வாகனங்களை இறக்குமதி செய்யும் போது ஏற்பட்ட சட்டச் சிக்கல் காரணமாக, இறக்குமதி செய்யப்பட்ட பல வாகனங்களை சுங்கத்திலிருந்து விடுவிக்க அனுமதிக்கப்படவில்லை.

அந்த தடையை நீக்கும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிதியமைச்சர் என்ற வகையில் அண்மையில் விசேட வர்த்தமானியை வெளியிட்டார்.

சுமார் 3 கப்பல்கள் மூலம் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்த 500 வாகனங்கள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சிவலி அருக்கொட குறிப்பிட்டார். (அ)

## மைத்திரி...

மூலம் உலகில் அதிக வழக்குகளை எதிர்கொள்ளும் நபராக நான் உள்ளேன்.

நான் என்றென்றும் வாழப் போவதில்லை. அந்த வழக்குகளும் ஒரு நாள் நான் மரணிக்கும் போது முடிவுக்கு வரும்.

மகாத்மா காந்தி, ஆபிரகாம் லிங்கன், பண்டாரநாயக்க போன்ற அரசியல் தத்துவ ஞானிகள் சுட்டுக் கொல்லப்பட்டது போல, ஒரு குழுவினர் எனது கொள்கையையும் சுட்டுக் கொன்றுள்ளனர் - என்றார். (அ)

## அவசியம்...

மறுபுறம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, நாங்கள் அதற்கு எதிராக ஆயுதம் ஏந்தினோம். நாங்கள் அதை ஏற்றுக்கொண்டோம். அன்று நாங்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஆயு தம் ஏந்தினோம்.

துப்பாக்கிச் சண்டை நடந்தது. ஒரு உள்நாட்டுப் கலவரம் வெடித்தது. ஆயுதங்களை வைத்து அரசியல் செய்யும் போது, இரு தரப்பினரும் இறக்கின்றனர்.

அதில், எங்கள் தரப்பில் சிலர் நடைபெறக்கூடாத சில விடயங்களைச் செய்திருப்பதை நாங்கள் ஒப்புக்கொண்டுள்ளோம்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி இந்த மாபெரும் படுகொலையைச் செய்தது. அறுபதாயிரம் பேரைக் கொன்று எங்கள் கட்சியைத் தடை செய்தது.

அப்போது அமைச்சர் பதவிகளை வகித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு இருந்தார். எனவே, இந்த உள்நாட்டுப் கலவரத்தின் பொறுப்பு, அதை தொடங்கிய நபரிடமே உள்ளது.

நாங்கள் அந்த உள்நாட்டுக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள். நாங்கள் போராட வேண்டியிருந்தது. நாங்கள் சண்டையிட்டோம். உலகம் முழுவதும் அதுதான் நடந்திருக்கிறது.

மக்கள் இரு புறமும் சண்டையிட்டனர். எனக்கு ஆயுதப் பயிற்சி இல்லை. எனக்கு அரசியல் பயிற்சி உண்டு. ஆயுதம் ஏந்த வேண்டியிருந்தபோது நாங்கள் ஆயுதம் ஏந்தினோம்.

அநீதி நடந்தால், அதை எதிர்த்துப் போராடுவோம். நாம் ஒரு ஜனநாயகத்தில் இருந்தால், ஜனநாயகத்திற்காகப் போராடுவோம் - என்றார். (அ)

## பட்டலந்த...

குமாரதுங்க பட்டலந்த ஆணைக் குழுவை அமைத்தார்.

இது, 1988-1990 காலகட்டத்தில் காணாமல் போனவர்கள் மற்றும் தனி நபர்கள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டது மற்றும் பட்டலந்த வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் தடுப்பு மையங்களின் செயல்பாடு குறித்து விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டது.

விசாரணைகளை நடத்த அப்போதைய ஜனாதிபதி பல முறை நீடிப்புகளை வழங்கிய போதிலும், அறிக்கை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்தக் குற்றங்கள் குறித்து அல் ஜசீரா ஊடகவியலாளர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கேள்வி எழுப்பியபோது, தொடர்புடைய ஆணைக் குழு அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று அவர் பதிலளித்தார். இதனையடுத்து, இந்த அறிக்கை கடந்த வாரம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தநிலையில் குறித்த அறிக்கையின் மூலம் யாரையும் நேரடியாக தண்டிக்க முடியாது. அதன் உள்ளடக்கங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்யலாமா அல்லது மேலதிக விசாரணைகளை நடத்தலாமா என்பதை சட்டமா அதிபர் தீர்மானிக்கவேண்டும்.

மரண தண்டனை விதிக்கப்படும் குற்றங்களைத் தவிர, மற்ற குற்றங்களுக்கு வரம்புகள் உள்ளன. 20 ஆண்டுகளுக்குப் பின்னர் குற்றங்களுக்கு வழக்குத் தொடர முடியாது. என்ற சட்ட நிலைமையும் உள்ளது.

நடைமுறையில், அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் இன்னும் உயிருடன் இருக்கிறார்களா, நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முடியுமா என்பது குறித்து பல கேள்விகள் உள்ளன.

அதேநேரம், கடத்தல் மற்றும் சித்திரவதை என்பன நீதிமன்றத்தில் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

## பெரும்...

அடிப்படையில் புதிய தரவு சேமிப்பு நிறுவனத்துக்கு அதனை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த தரவுக் குழு நிறுவனம் சிங்கப்பூரை தளமாகக் கொண்ட ஒரு அமெரிக்க நிறுவனத்துக்கு சொந்தமானது என்று தெரியவருகின்றது.

அதனை Cloud முறையில் சேமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க தரவு பாதுகாப்புச் சட்டத்தின்படி, அமெரிக்க அரசாங்கம் அந்த நாட்டில் உள்ள நிறுவனங்களின் தரவுத் தளங்களில் சேமிக்கப்பட்டுள்ள தரவை எந்த நேரத்திலும் பரிசோதனை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

அதன்படி, இலங்கை அரசாங்கத்திடம் உள்ள இந்தத் தரவுகள் மற்ற நாடுகளுக்கு அம்பலப்படுத்தப்படும் அபாயம் இருப்பதாக தகவல் தெரிவித்த வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

இந்த வழியில், Public cloud இற்கு தரவை மாற்றும்போது, சர்வதேச ஒப்பந்த முறையின்படி, சிங்கப்பூரைச் சேர்ந்த அஸூர் என்ற நிறுவனம் தொடர்புடைய ஒப்பந்தத்தை வென்றது. இந்த நிறுவனம் மைக்ரோசொப்டின் ஒரு அமெரிக்க துணை நிறுவனமாகும்.

அரசாங்கத்துக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை இணைய வழியில் வாங்கும் செயல் முறையுடன் தொடர்புடைய அனைத்து தரவுகளும் தகவல்களும் இந்த அமைப்பில் சேமிக்கப்படுகின்றன.

மேலும் பல நாடுகள் அந்தத் தரவைத் தங்கள் சொந்த தரவுத்தளங்களில் தக்க வைத்து, அதன் பயன்பாட்டுக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. தொடர்புடைய ஒப்பந்தங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன. மேலும் நிதி அமைச்சுடன் தொடர்புடைய அதிகாரிகள் இதற்கு உறுதுணையாக இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கொழும்பு - கண்டி வீதியில் விபத்து; 30 பேர் காயம்!

கொழும்பு, மார்ச் 23

கொழும்பு - கண்டி வீதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 30 பேர் காயமடைந்துள்ளனர். குறித்த விபத்து நேற்று தும்மலதெனியா, வரக்காபொல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதால் இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் 30 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## உள்ளூராட்சி...

பொதுமக்களின் முறைப்பாடுகளை இந்த செயலி மூலம் அளிக்க முடியும் என்பதுடன் தங்கள் முறைப்பாடு தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கையும் கண்டறிய முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்த செயலி மூலம் காணொளிகள் மற்றும் மற்றும் படங்களை வழங்கும் வசதியும் உள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

## சோடா...

சென்றுள்ளார்.

இதன்போது அவ்விடத்திற்கு வந்த குழந்தை சோடா என நினைத்து டீசலை அருந்தியது. இந்நிலையில் குழந்தை மயக்கமுற்றது. பின்னர் குழந்தை ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தை சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை 2.30 மணியளவில் உயிரிழந்தது. குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-05)

## தேசபந்துவை...

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட தேசபந்து தென்னக்கோனை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டு வர அரசாங்கம் தயாராகி வருவதாக அரசாங்கத்தின் உள்ளக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணையை அரசாங்கம் மிக விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்று அரசாங்கத்தின் மூத்த செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பயன்படுத்தி தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் தென்னக்கோன் பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்று அவர் தெரிவித்தார்.

இந்த பிரேரணை, பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்துகொண்டு நாட்டின் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதையும், அரசின் நம்பகத்தன்மைக்கு சேதம் விளைவிக்கும் வகையில் செயற்படுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

வெலிகம பெலேன ஹோட்டலுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் கைதான தேசபந்து தென்னக்கோன், தும்பர விளக்கமறியல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 28வீத...

எனவும் மீதமுள்ளவர்களில் 25.5 சதவீத மானோர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளைப் பயன்படுத்துபவர்களில் பெரும்பாலோர் 16-17 வயதுக்குட்பட்டவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நாட்டில் கடந்த 12 மாதங்களில் 5.4 வீத பாடசாலை மாணவர்கள் சைபர் மிரட்டலுக்கு ஆளாகியுள்ளனர் என்பதைக் கணக் கெடுப்பு அறிக்கை மேலும் வெளிப் படுத்தியுள்ளது.

அவர்களில், 13-15 வயதுடைய சிறுவர்களில் 5.6 வீதம் பேர் சைபர் தாக்குதலுக்கு ஆளாகின்றனர், மேலும் பெண் குழந்தைகளை விட சிறுவர்கள் சைபர் தாக்குதலுக்கு ஆளாகும் வாய்ப்பு அதிகம் என்பது கண்டறியப்பட்டுளது. (அ)

## புலிகள்...

மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' என்னும் புதிய கூட்டணி கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் வி.முரளீதரன், மற்றும் பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் இணைந்து கொண்டதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று மட்டக்களப்பு றிவோரா ஹோட்டலில் கைச்சாத்திடப்பட்டது.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த கருணா,

இது புதிய இணைவல்ல. நாங்கள் இணைந்து தான் இருந்திருக்கின்றோம்.

நான் மத்திய அரசோடு பயணித்தவன், பிள்ளையான் மாகாண அரசில் செயற்பட்டவர். அந்தக் காலத்தில் நாங்கள் இருவரும் இணைந்து பாரிய அபிவிருத்திப் பணிகளைகளை முன்னெடுத்து பலமாற்றங்களை உருவாக்கியிருக்கின்றோம். இன்று அதே நோக்கத்துடன் மீண்டும் இணைந்திருக்கின்றோம்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து நாங்கள் பிரிந்தவர்கள் என்பதை விட நாங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் என்றுதான் கூற வேண்டும். அந்த நிலையில் நாங்கள் எமது கிழக்கு மாகாண இளைஞர்கள், மக்களின் உயிர்களைக் காக்க வேண்டும் என்பதற்காகவே நாங்கள் பிரிந்து வரும் முடிவினை எடுத்தோம்.

அதன் பிற்பாடு நாங்கள் பல துன்ப துயரங்களைச் சந்தித்திருக்கின்றோம். விடுதலைப் புலிகளை எதிர்த்து நின்று வென்றவர்கள் என்றால் அது நாங்கள் மட்டுமாகத் தான் இருக்க முடியும். அந்த தலைமையின் தவறான முடிவினாலேயே நாங்கள் வெளியேறினோம்.

அந்த நிலையில் கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட கட்சிதான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி.

இதனை நாங்கள் சாதாரணமாக நினைத்து விட முடியாது. பல்லாயிரக் கணக்கான போராளிகளின் தியாகங்களினால் அத்திவாரமிடப்பட்ட கட்சியே அது.

அக்காலம் ஆயுதக் கலாசாரம் மிகவும் தீவிரமாக ஊறியிருந்த நிலையில் மக்களை ஜனநாயக வழியில் கொண்டு வருவதென்பது மிகவும் கடினமான ஒரு விடயம்.அந்த நிலையில் கிழக்கு மாகாண மக்களுக்கான அரசியலை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவந்த கட்சி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியாகும். இதனை எவரும் மறுக்க முடியாது.

இன்று பல மாற்றங்களைக் கடந்து மீண்டும் நாங்கள் இணைந்திருக்கின்றோம். ஏனெனில் நாங்கள் எந்த நோக்கத்திற்காக விடுதலைப் போராட்டத்தில் இருந்து வந்தோமோ அதே நோக்கத்திற்காக நாங்கள் மீண்டும் இணைந்திருக்கின்றோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# தனது எம்.பி. ஓய்வூதியத்தை நீக்க கோருகிறார் ஜனாதிபதி



கொழும்பு, மார்ச் 23

தமக்கு வழங்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியத்தை நீக்குவது தொடர்பில் தாம் பாராளுமன்றத்துக்கு கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போது 1 மில்லியன் ரூபாயாக காணப்படும் பாராளுமன்ற உறுப் பினர்களுக்கான காப்புறுதித் தொகை 250,000 ஆயிரம் ரூபாயாக குறைக்கப்படுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். கடந்த காலங்களில் ஜனாதிபதியாக இருந்தவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. எனினும் தமக்கு குறித்த பாராளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியம் வேண்டாம் என எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்துள்ளார். (அ)

# பட்டலந்த வெறும் காட்சி மாத்திரமே!

**சந்திம வீரக்கொடி**

கொழும்பு, மார்ச் 23

பட்டலந்த என்பது மற்றுமொரு காட்சி மாத்திரமே என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது ஒரு அரசியல் அத்தியாயம். எதிர்பாராமல் விழுந்த பந்துக்குத் தான் இவர்கள் துடுப்பாட முயற்சிக்கிறார்கள். இந்தப் பட்டலந்த அறிக்கையைப் பற்றிப் பேசுகையில், இது 1998 இல் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையை 1998 ஆம் ஆண்டு முன்வைக்கவில்லை.

2001 ஆம் ஆண்டு சந்திரிகா தோல்வியடைந்து மீண்டும் அதிகாரத்தைப் பெற்று ஆட்சிக்கு வந்தார். இந்த சந்தர்ப்பத்தில் மக்கள் விடுதலை முன்னணியில் ஜனாதிபதி உள்ளிட்ட நான்கு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னரே இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த சந்தர்ப்பத்தில் மக்கள் விடுதலை முன்னணிக்கு பெரும் அதிகாரம் இருந்தது. எனினும் அந்த பட்டலந்த அறிக்கையைச் செயற்படுத்தி தமது சகோதரர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரவில்லை. அதன் பின்னர் 2004 ஆண்டு மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானார்.

அதன்போது மக்கள் விடுதலை முன்னணியில் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர் வழங்கிய ஆதரவிலேயே அவர் ஜனாதிபதியானார். அந்தக் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பட்டலந்தவுடன் தொடர்புடையவர்களுக்குத் தண்டனை வழங்குமாறு யாரும் கூறவில்லை - என்றார். (அ)

# தேசபந்து தென்னக்கோனுக்கு விசேட பாதுகாப்புக்கு ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 23

நீதிமன்ற உத்தரவின் பேரில், தற்போது சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு விசேட பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவர் தற்போது பல்லேகலே, தும்பர சிறைச்சாலையில் உள்ள பாதுகாப்பான அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாத்தறை வெலிகம பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக, பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி மாத்தறை நீதவான் நீதிமன்றம், பொலிஸ் மா அதிபர் உட்பட 8 பேருக்கு பிடியாணை பிறப்பித்திருந்தது.

அதன்படி, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட தேசபந்து தென்னக்கோன் ஏப்ரல் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# 300 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா தும்பளைக் கடற்கரையில் சிக்கியது!

யாழ்ப்பாணம், மார்ச் 23

**பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தும்பளை மூர்க்கன் கடற்கரைப் பகுதியில் 300 கிலோவுக்கும் அதிகமான நிறைகொண்ட சுமார் 6 கோடி ரூபா பெறுமதியான கஞ்சா பொதிகள் நேற்று அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளன.**



இராணுவப் புலனாய்வாளர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், இராணுவம் மற்றும் கடற்படையினர் இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையில் இந்த கஞ்சா மீட்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது, கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மீன்பிடிப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

இருப்பினும், இதுவரை எந்த நபர்களும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் தலைமை அதிகாரி நேரடியாக சம்பவ இடத்துக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் படகு ஆகியவை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு யாழ்ப்பாணத்தில் பெருந்தொகையில் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ள இந்த சம்பவம், பிரதேசத்தில் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான கவலைகளை மீண்டும் எழுப்பியுள்ளது. (அ-02-05)

# யாழ். நூலகத்தை எரித்த பாவிகளே எம்மை கொலைகாரர் என்கிறார்கள்!

**சபையில் கூறியது தேசிய மக்கள் சக்தி**

கொழும்பு, மார்ச் 23

ஐக்கிய தேசியக் கட்சியே இலங்கையில் கொலை மற்றும் சித்திரவதைக் கலாசாரத்தை உருவாக்கியது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். நூலகத்தை எரித்து சாம்பலாக்கிய பாவிகள்தான் ஐக்கிய தேசியக் கட்சியினர். இவர்கள்தான் இன்று எம்மை கொலைக்காரர்கள் என்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கொலைப் பட்டியல் தொடர்பில் எதிரணி உறுப்பினர் ஒருவர் உரையாற்றினார். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பிறகு ஐக்கிய தேசியக் கட்சியினரே கொலைக் கலாசாரத்தை அறிமுகப்படுத்தினர். 1956,1958 இல் எமது மக்களை கொலை செய்தார்கள். இந்நாட்டில் இனக்கலவரத்தை தூண்டினார்கள். அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் என்பவற்றைக் கொண்டுவந்து இளைஞர்கள் சித்திரவதைகளுக்கு உட்படுத்திக் கொலை செய்தார்கள்.

யாழ். நூலகத்தை எரித்து சாம்பலாக்கிய பாவிகள்தான் ஐக்கிய தேசியக் கட்சியினர். இவர்கள் தான் இன்று எம்மை கொலைக் காரன்கள் என்கிறார்கள். சிறைச் சாலையில் இருந்த குட்டிமணி, ஜெகநாதன் போன்றவர்களின் கண்களைத் தோண்டி எடுத்து சிறைக்கைதிகளை கொன்றவர்கள்.

போர் மூள்வதற்கு காரணமாக இருந்தவர்கள் இன்று தங்களை புனிதர்களாக காண்பித்துக்கொள்வதற்கு முற்படுகின்றனர் - என்றார். (அ)

# சர்வதேச பல்கலைக்கழகங்களை நாட்டுக்கு கொண்டு வரவேண்டும்

**மனோ கணேசன் கோரிக்கை**

கொழும்பு, மார்ச் 23

அரசாங்கத்தின் கொள்கைகள் தற்போது மாறி இருக்கிறது. அதனால் எமது மாணவர்கள் சர்வதேச பல்கலைக்கழகங்களில் இணைந்து படிப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அதற்காக சர்வதேச பல்கலைக்கழகங்களை நாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

தனியார் பல்கலைக்கழகம் தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு நிலைப்பாடுகள் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு இருந்தன. அனால் தற்போது அது மாறி இருக்கும் என நினைக்கிறேன். மாறவேண்டும். அதனால் சர்வதேச பல்கலைக்கழகங்கள் உத்தியோக பூர்வமாக நாட்டுக்குள் வருவதற்கு இடமளிக்க வேண்டும். அன்று அம்பந்தோட்டை எண்ணெய் சுற்றிகரிப்பு தொடர்பில் நாங்கள் நடவடிக்கை எடுக்கும்போது, சீனாவின் கொலனி ஒன்றை அமைக்கப்போவதாக தெரிவித்திருந்தீர்கள். அதேபோன்று திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் கதைக்கும்போது இந்தியாவின் கொலனி அமைக்கப்போவதாக பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா போராட்டக்களத்து வந்து தெரிவித்திருந்தார்.

தற்போது எல்லாம் மாறி இருக்கிறது. அதனால் எமது மாணவர்கள் சர்வதேச பல்கலைக்கழகங்களில் இணைந்து படிப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்காக சர்வதேச பல்கலைக்கழகங்களை நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக எமது ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறோம்.

அதேவேளை, மதுபானச்சாலை உரிமைப்பத்திரம் பெற்றுக்கொண்டவர்களின் பட்டியலை சபைக்கு சமர்ப்பிப்பதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரை சமர்ப்பிக்கவில்லை. ரணில் விக்ரமசிங்க மதுபானச்சாலை உரிமைப்பத்திரம் வழங்கி அரசியல்வாதிகளை தனது பக்கம் இழுத்துக்கொண்டதாக தெரிவித்தார். அப்படியானால் அந்த பெயர்ப் பட்டியல் எங்கே என கேட்கிறோம். இந்த அரசாங்கத்துக்கு பட்டியல் அரசாங்கம் என்றே தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மதுபானச்சாலை உரிமைப் பத்திரம் பெற்றுக்கொண்வர்கள் என பட்டியல் ஒன்றை வெளியிட்டிருந்தார். அதேநேரம் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வைத்திருப்பவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட்டிருந்தார். அதேபோன்று ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணம் பெற்றவர்களின் பெயர் பட்டியலை வெளியிட்டார்கள்.

ஆனால் இந்த எந்த பெயர்ப் பட்டியலிலும் எனது பெயர் இல்லை. 2001 இல் இருந்து இருக்கிறேன். மதுபானச்சாலை பத்திரம் எடுக்கவும் இல்லை. வேறு அனுமதிப் பத்திரங்கள் எடுக்கவும் இல்லை. அரயல் தேவைக்கோ எனது சொந்த தேவைக்கோ ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணம் பெற்றதும் இல்லை. அதேபோன்று அரச சொத்துக்களை துஷ்பியோகம் செய்ததும் இல்லை. என் கரங்கள் தூய்மையானதாகும் - என்றார் (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org